33

THE "VAKIL"—TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

# "வக்கீல்"

பொதுமக்களுக்குத் தேவையான புதிய சட்ட விஷயங்களை உடனுக்குடன் விளக்கும் தமிழ் மாதப்பத்திரிகை

## இந்த இதழில்


இந்தியக் குடியரசு அமைப்புச் சட்டம்

ஹிந்து சட்டத்தில் புரட்சிகரமான மாறுதல்கள்


வழக்கும் - தீர்ப்பும்

கேள்வி - பதில்

நெல் விலை நிர்ணயம்

மற்ற கண்ட்ரோல் உத்தரவுகள்


33/1-50




5-1-50.
OFFICE OF THE REGISTRAR
JAN 1950
1647

ஜனவரி 1950

தபால் பெட்டி நெ. 26. கும்பகோணம்.

தனிப்பிரதி அணா 4
வருட சந்தா ரூ 3

கல்யாண ஸீஸனுக்கென்றே புதுப்புது டிஸைன்

# பெங்களூர், காஞ்சீவரம், கும்பகோணம்

# பட்டுச் சேலைகள்

ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிரேம். தேவைக்கு உடனே முந்துங்கள்.

## ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு, :: கும்பகோணம்.

பிராஞ்சுகள் :—மே. மே. வீதி, காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

---

சாயத்திற்கு உத்திரவாதமுள்ள
அற்புத கலர்களில் கவர்ச்சி செய்யும் பார்டர்கள்
முந்திகள் அமைந்த எமது சொந்த கை நெசவு
**ஜரிகை பட்டு & நூல் சேலைகள்**

வேண்டியவற்றிற்கு ஆர்டர் கொடுங்கள்.

பிரிட்டிஷ் எம்பயர் எக்ஸிபிஷனில் மெடல் சர்டிபிகேட் பெற்ற

## ராணி ரெங்கய்யர் ஸன்ஸ்

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

கெருடலாயத் தெரு — கும்பகோணம்

கிளை : 20, லெக்ஷிமிபுரம் 2-வது தெரு, மதுரை.

# "வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர
மாத சட்ட வெளியீடு.



**ஆசிரியர் கமிட்டி**

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜபத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L.



## "வக்கீல்"

(சந்தா விபரம்)

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ... ... ரூ. | 3—0—0 |
| தனிப் பிரதி (வெளிவரும் மாதத்தில்) | ... | 0—4—0 |
| முந்திய மாதப் பிரதி | ... | 0—6—0 |
| வெளிநாடு வருட சந்தா | ... | 6—0—0 |

"வக்கீல்" காரியாலயம்
தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம்



# "வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 2 ஜனவரி' 50 இதழ் 1



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
-JAN 1950


## பொருள் அடக்கம்


| | |
|---|---|
| குறிப்புகள் | 3 |
| இந்தியக்குடியரசு அமைப்புச்சட்டம் | 5 |
| ஹிந்து சட்டத்தில் புரட்சிகரமான மாறுதல்கள் | 11 |
| வழக்கும்-தீர்ப்பும் | 15 |
| கேள்வியும்-பதிலும் | 18 |
| பத்திரங்கள்-"செட்டில்மெண்ட்" | 22 |
| கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன் விலை நிர்ணயம்-இதர சர்க்கார் அறிக்கைகள் | 23 |



## சந்தாதாரர்கள் கவனிக்கவும்

1. வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் அனுப்பப்படும். முந்திய மாத இதழ்கள் தேவையானல் பிரதி 1-க்கு அணு 6 வீதம் சேர்த்து அனுப்ப வேண்டும். கைவசம் இருக்கும் முந்திய மாதப் பிரதிகளை மட்டில்தான் அனுப்பக்கூடும். "வக்கீல்" பத்திரிகை 1949 லு ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

2. ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

3. சந்தாதாரர்களாகச் சேர விரும்பும் நேயர்கள் தங்கள் விலாசத்தை கொட்டை எழுத்தில் தனித்தனி எழுத்தாக எழுதும்படி கேட்டுக்கொள்ளப் படுகிருர்கள்.

4. "வக்கீல்" பத்திரிகை சாதாரணமாய் ஒவ்வொரு இங்கிலீஷ் மாதமும் முதல் தேதியிலேயே பிரசுரம் செய்யப்படும். பிரதிகள் வரவில்லை என்று தெரிவிக்கும் வருட சந்தாதாரர்கள் ஒவ்வொரு மாதமும் 15-ம் தேதிக்குள் எழுதும்படிக்கும் அவர்கள் சந்தா நெம்பரைத் தெரிவிக்கும்படிக்கும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# விளம்பரம்

இனும் கிராம பூஸ்திதிகளை (எடுத்து விடுவதையும் ரயத்துவாரியாக மாற்றுவதையும்) பற்றிய 1948-ம் வருஷத்திய சென்னபட்டணத்து சட்டத்தின் (2) (7) பிரிவில் அர்த்தம் சொல்லப்பட்ட படியுள்ள ஓர் இனும் பூஸ்திதியா இல்லையா என்று விசாரணை செய்து தீர்மானிப்பதற்காக திருச்சி, தஞ்சாவூர், தென் ஆற்காடு, சேலம், மதுரை, கோயம்புத்தூர் ஜில்லாக்களுக்கு ஓர் செட்டில் மெண்ட் ஆபீஸர் நியமிக்கப்பட்டு இவர் தமது விசாரணையை நடத்தி வருகிறார். இவரது காரியாலயம் திருச்சி ஜில்லா கலெக்டர் ஆபீஸ் கட்டிடத்தின் ஒரு பகுதியில் இருக்கிறது. இவர் மேலே கூறிய 6 ஜில்லாக்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்து ஒவ்வொரு தாலுகாவின் தலை நகரத்திலும் தங்கி தமது விசாரணையை நடத்துவார். விசாரணை செய்யும் தேதிகளைப் பற்றியும், நேரத்தைப் பற்றியும் முன் கூட்டியே சம்பந்தப்பட்ட கிராமங்களில் பிரசித்தம் செய்யப்படும். கிராமத்திலிருக்கிற யாதொரு நிலத்தில் பாத்தியதை கொண்டாடுகிற சகல நபர்களும் நிலத்துக்குடையவர்களும் இப் பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட எல்லா தஸ்தாவேஜுகளுடனும் ஷை ஆபீஸர் முன்னிலையில் ஆஜராகி வாக்குமூலம் கொடுக்கும்படியும், தஸ்தாவேஜுகள் தாக்கல் செய்யும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(Sd.) **T. G. Narasinga Rao Naidu**
இனும் செட்டில்மெண்ட் ஆபீஸர்,
நம்பர் IV திருச்சிராப்பள்ளி.


## தென் இந்திய ரெயில்வே
## டெலிவரி & புக்கிங் ஸர்வீஸ்

உங்களுக்கு ரயிலில் வரும் சாமான்களை உங்களிடத்தில் பொறுப்புடன் சேர்க்கவும், உங்கள் சாமான்களை புக்கிங் செய்து ரசீதை உங்களிடம் கொண்டு சேர்க்கவும் அடியிற்கண்ட இடத்தில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

**D. SRINIVASAN,**
**Street Delivery Contractor,**
7. Pillaiar Koil Street, KUMBAKONAM.

திருச்சிக்கு
"வக்கீல்" பத்திரிகை ஏஜண்ட்
திரு. G. வைத்தியநாதன்
22, வன்னியடி தெரு (Rock Fort)
தெப்பக்குளம், திருச்சி டவுன்.

"வக்கீல்" பத்திரிகை

டிராவலிங் ஏஜண்ட் திரு. தண்டாங்கோரை S. வெங்கடராமன், அவர்களுக்கு எல்லா இடங்களிலும் வருட சந்தாதாரர்கள் சேர்க்கவும், விளம்பரம் சேர்க்கவும் அதிகாரம் உண்டு.

## சவுத் இந்தியன்
## சோப் ஒர்க்ஸ்
**P. B. No. 38**
**தஞ்சாவூர்**

*தயாரிப்புகள்:—*

**அப்ஜா—ஆனந்தா—கதம்பா**
**ரஞ்சிதா—நீரடிமுத்து**

நறுமணங்கமழும் ஸ்நான சோப்புகள் யாவராலும் போற்றப்படுபவை.

மொத்த வியாபாரிகள் மட்டுமே தேவைக்கு எழுதவும்.

திருநெல்வேலி ஜில்லாவிற்கு
"வக்கீல்" பத்திரிகை ஏஜண்ட்
திரு. T. S. பரமசிவன் செட்டியார்
135, F-S வடக்கு ரத வீதி,
திருநெல்வேலி டவுன்.

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 2 ஜனவரி 1950 இதழ் 1

# குறிப்புகள்

**அரசே! உமது ஆட்சி நீடூழி வாழ்க!:** உங்களைத் திடீரென்று ஒரு பெரிய தேசத்தின் அரசனைச் செய்து உங்களுக்குப் பட்டம் கட்டினால் என்ன செய்வீர்கள்? இக்கேள்விக்கு யோசித்துப்பதில் சொல்வதற்குக்கூட இனி உங்களுக்கு அவகாசமில்லை. ஏனென்றால் 1950 ஜனவரி 26-ஆம் தேதி நீங்கள், உண்மையாகவே, ஒரு பெரிய நாட்டின் அரசை ஏற்றுக் கொண்டு விடுவீர்கள் என்பது திண்ணம். நீங்கள் இவ்விதம் அரசை ஏற்றுக்கொள்ளத் துணிந்த நாடு எது? அது எவ்வளவு பெரிது? அசோக சக்கரவர்த்தியின் சாம்ராஜ்யத்தை விடப்பெரிதல்லவோ! சேர சோழ பாண்டிய மன்னர் இவ்வளவு பெரிய நாட்டில் ஆட்சி புரியவில்லையே! மொகலாய பாதுஷாக்களும், ரஜ புத்திர வீரர்களும், மகாராஷ்டிர பேஷ்வாக்களும் விஜயநகர சக்கரவர்த்திகளும் கூட இவ்வளவு பெரிய நாட்டைக் கனவிலும் காணவில்லையே! ஆங்கிலேய மன்னர்கள் அடக்கி நேரில் ஆட்சி புரிந்த நாட்டை விடவும் விசாலமாக இருக்கின்றதே! இப்பெரிய பாரத நாட்டின் செங்கோல் அல்லவா இம்மாதம் 26-ஆம் தேதி மாட்சிமை தங்கிய ஜார்ஜ் மன்னர் பிரானிடமிருந்து, இந்நாட்டின் குடிகளாகிய உங்கள் வசம் ஒப்புவிக்கப்படும். நீங்களும், அம்மன்னர் போலவே, உங்கள் மந்திரிகள் மூலமாகத்தான் ஆட்சி புரிவீர்கள். குடி அரசே! உமது ஆட்சி நீடூழி வாழ்க!

**மலர் 2:** "வக்கீல்" பத்திரிகையின் இரண்டாவது மலர் இந்த இதழ் முதல் ஆரம்பமாகின்றது. "வக்கீல்" 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டாலும் டிசம்பருடன் முதல் மலர் முடிவுற்றது. இனி ஒவ்வொரு ஆங்கில வருடத்திற்கும் ஒரு இதழாகக் கணக்கு வைத்துக் கொள்ளலாம். இப்படிச் செய்வதில் நாம் மற்ற ஆங்கில சட்டப்பத்திரிகைகளின் சம்பிரதாயத்தைத்தான் தழுவி இருக்கிறோம். மேலும் இனி ஒவ்வொரு இதழிலும் பக்க எண்ணுடன் வருடம், மாதம் இரண்டும் இருக்கும். இதில் நேயர்களுக்குப்பல சௌகரியங்கள் இருக்கின்றன. வருடக் கடைசியில் பைண்ட் செய்து வைத்துக் கொள்ளவும் இது சௌகரியமாக இருக்கும். வருடச்சந்தா கட்டும் நேயர்களுக்கு

எப்பொழும் போல் அவரவர் சேரும் இதழி லிருந்து 12 இதழ்கள் அனுப்பப்படும். குடியரசு இந்தியாவில் "வக்கீல்" பத்திரி கையின் சேவை பன் மடங்கு விஸ்தரிக்கப் படும்.

**இந்தியக் குடியரசு அமைப்புச் சட்டம்:** இம்மாதம் 26-ஆம் தேதி அமுலுக்கு வரும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் ஒரு பெரிய புத்தகம். சர்க்கார் பதிப்பில் அதன் பொருளடக்கம் மட்டில் 18 பக்கங் கள் இருக்கின்றன. சட்டம் 251 பக்கங் கள் இருக்கின்றன. நேயர்கள் இம்மாத "வக்கீல்" இதழில் அச்சட்டத்தின் அடிப் படையான அம்சங்களை மட்டில் தெரிந்து கொள்ளும் விதம் "வெள்ளோட்ட"மாக எழுதி இருக்கிறோம். இனி அடுத்து வரும் ஒவ்வொரு இதழிலும் இச்சட்டத்திலுள்ள ஒவ்வொரு முக்கிய விஷயத்தை நுட்பங்களு டன் விவரிப்போம்.

**ஹிந்து சட்டம்: எல்லா முக்கிய விஷ யங்களிலும் மாறலாம்:** நமது நேயர்கள் மிக ஜாக்கிரதையாகக் கவனித்து வர வேண்டிய வேறு ஒரு முக்கிய விஷயமும் இந்த இதழ் முதல் ஆரம்பமாகின்றது. அது தான் ஹிந்து சட்டத்தொகுப்பு மசோதா. ஹிந்துகளின் கலியாணம், சுவீகாரம், வாரிசு உரிமை, சொத்துரிமை, குடும்பம், ஜீவனாம்சம் முதலிய முக்கிய விஷயங்களில் சட்டத்தை ஒரே அடியாக மாற்றுவதற் கான ஒரு மசோதா இந்திய யூனியன் சட்ட சபையில் சர்க்காரால் கொண்டுவரப்பட் டிருக்கிறது. இது இன்னும் சட்டமாக வில்லை. இருந்தாலும் மசோதாவாக இருக்கும்போதே நேயர்கள் அதைக் கவனித்து வந்தால்தான் காற்று எந்தப் பக்கம் அடிக்கிறதென்று தெரியும். இனி "வக்கீல்" இதழில் இச்சட்டம் எந்த நிலை மையில் இருக்கிறதென்று தெரிவித்து வரு வதுடன் அமுலுக்கு வரக்கூடிய விதம் சட்டமானாலும் அதையும் பின்பு விவரமாக எழுதுவோம். இந்த இதழில் மசோதா வில் இருக்கும் விஷயங்கள் விவரமாய் எழுதப்பட்டிருப்பதை நேயர்கள் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டும்.

**கள்ள மார்க்கெட்காரர்களுக்கு-மரணதண்ட னை!** இத்தலைப்பைத் தினசரிப் பத்திரி கைகளில் வாசித்த பொதுஜனங்களில் யாராவது பயந்திருந்தாலும் இல்லாவிட் டாலும் ஒருவகை ஆசாமிகள் மட்டும் இதைக்கண்டு ஒரு நாளும் பயந்திருக்க மாட்டார்கள். அவர்கள் யார் தெரியுமா? அவர்கள்தான் கள்ள மார்க்கெட்டை நடத் தும் வீரர்கள். சட்டங்களை அமுல் நடத்துவோரை மயக்கிப் பல சட்டங்களை ஏமாற்றிவரும் இவர்களுக்கு மரண தண் டனை விதிக்கும் சட்டமும் ஒரு கடுதாசு சட்டம்தானே! இவர்கள் ஏமாற்றவேண்டிய பல சட்டங்களில் இதுவுமொன்று. அவ் வளவுதானே! இந்திய பார்லிமெண்டில் திரு. கே. டி. ஷா என்ற ஒரு பொருளாதார ஆசிரியர் இவ்விதம் சட்டம் செய்யவேண்டு மென்று ஒரு மசோதா கொண்டு வந்திருக் கிறார். சட்டசபையும் அதை அனுமதித் திருக்கின்றது. இது சட்டமானால் கள்ள மார்க்கெட்காரர்கள் சிரிப்பார்கள். விஷயம் புரியாமல் ஒருவேளை பசியாற அவர்களிடம் கூலி வாங்கி, அவர்களுக்கு உதவி புரிந்த வண்டிக்காரர்களும் மூட்டை தூக்கிகளும் தூக்கிலிடப் படுவதைப் பார்த்து, கள்ள மார்க்கெட் மன்னர்கள் நகைப்பார்கள்!

நூலகம் 187693 சென்னை



# புதிய சட்டங்கள்

## இந்தியக் குடியரசு அமைப்புச் சட்டம்

"இந்தியாவின் மக்களாகிய நாம், இந்தியாவை சுதந்திர ஜனநாயக குடியரசாக அமைத்து, அதன் எல்லா பிரஜைகளுக்கும், சமூகப் பொருளாதார அரசியல் நீதியும், சிந்தனை, சொல், நம்பிக்கை, மதம், வழிபாடு ஆகியவற்றில் சுதந்திரமும், அந்தஸ்து, வாய்ப்பு ஆகியவற்றில் சமத்துவமும் கிட்டும்படி செய்து, எல்லோரிடையிலும் சகோதரத் தத்துவத்தை வளர்த்து, தனிமனித கவுரவம், தேசத்தின் ஐக்கியம் இரண்டையும் உறுதிப் படுத்துவதென்றும் மனப்பூர்வமாக சங்கல்பம் செய்துகொண்டு, நமது அரசியல் நிர்ணய சபை மூலம் 1949 நவம்பர் 26-ந் தேதியன்று ஒரு அரசியலமைப்பை இயற்றி சட்டமாக்கி அங்கீகரித்து, நமக்கு நாமே அளித்துக் கொள்கிறோம்."—அரசியல் அமைப்புச் சட்டம் - முன்னுரை.

இதுவரை நேயர்கள் இப்பகுதியில் வாசித்துவந்த சட்டங்கள் எல்லாவற்றையும் விட மிக முக்கியமான தாய்ச் சட்டமாகிய இந்தியக் குடியரசு அமைப்புச் சட்டத்தைப்பற்றி இங்கு இன்று கவனிப்போம். இது 26—11—1949-ல் நிறைவேற்றப்பட்டது. 26—1—1950-ல் அமுலுக்கு வரும். இச்சட்டத்தை யார் இயற்றியது, யாருக்காக, எதற்காக என்பதைச் சற்று ஆராய்ந்த பிறகு அதன் நுட்பங்களைக் கவனிப்போம்.

இச்சட்டத்தின் அமைப்பை ஓர் உவமையைக் கொண்டு நன்கு விளக்கலாம். உங்கள் கடிகாரத்தை நன்றாகக் கவனித்திருக்கின்றீர்களா? நீங்கள் சாவி கொடுத்துவிட்டால் அதன் ஒவ்வொரு உறுப்பும் தானாக வேலைசெய்ய ஆரம்பித்துவிடுகின்றது. மணி முள், நிமிஷ முள், வினாடி முள், (இன்னும் உயர்ந்த கடிகாரம் உங்களிடம் இருந்தால்) தேதி காண்பிக்கும் முள் எல்லாம் அது அது தன் தன் வேலையைத் தனக்குள்ள வேகத்துடன் செய்யும். மணி முள் செய்யவேண்டிய வேலையை நிமிஷ முள் செய்யாது; நிமிஷ முள் செய்யவேண்டிய வேலையை மணி முள் செய்யாது. அப்படிச் செய்தால் கடிகாரத்தில் ஏதோ கோளாறு என்பதை அறிந்து தேவையானால் அந்த முள்ளைக் கழற்றி எறிந்துவிட்டு வேறு புது முள் போடலாம். சில வேளைகளில் இந்த முட்கள் ஒன்றுக்கொன்று சிக்கிக்கொள்ளலாம். அதையும் பழுதுபார்த்துக் கவனிக்கவேண்டியது யார்? கடிகாரத்தின் சொந்தக்காரராகிய நீங்களே. உங்களுக்குக் கடிகார ரிபேர் செய்யத் தெரியாவிட்டாலும் உங்களுக்காக வேறு ஒருவரைக் கொண்டு பழுதுபார்க்கலாம். இந்தக் கடிகாரம் அடிக்கடி தொந்தரவு கொடுத்து உங்களுடைய மற்ற முக்கிய காரியங்களைக் கவனிக்க முடியாமல் இதே உபத்திரவமாக இருந்தால் அக்கடிகாரத்தை விட்டெறிந்துவிட்டு வேறு கடிகாரத்தைச் செய்துகொள்ளலாம்.

இதுபோலத்தான் நமது "இந்தியக் குடியரசு அமைப்பு". இதை யார் சிருட்டித்தது? நீங்களும், நாமும், மற்றுமுள்ள இந்தியக் குடிமக்களும்தான். நாமே நேரில் கூட்டம் கூடி, கலந்துகொண்டு இதைச் சிருட்டித்தோமா? இல்லை. இது சாத்தியமாகாது. நம் எல்லோராலும் தேர்ந்தெடுக்-

கப்பட்ட நமது நம்பிக்கைக்குப் பாத்திர மான நமது பிரதிநிதிகளைக் கொண்டு இந் நாட்டை நாமே ஆண்டுகொள்ளும் விதம் நமக்காக ஒரு அரசியல் கடிகாரம் அமைக் கச் சொன்னோம். இரண்டு வருட கால மாக நமக்காகவே டில்லியில் கூடி இவ்வேலை யைச் செய்து முடித்த நமது "அரசியல் நிர்ணய சபை" தங்களிடம் ஒப்படைக்கப் பட்ட வேலையை நன்கு செய்திருக்கின்றது. அவர்கள் அமைத்திருக்கும் இந்த அரசியல் அமைப்பு என்ற கடிகாரம் 26—1—1950 முதல் நிற்காமல் ஓடும். இந்தக் கடிகாரத் தின் அழகிய உறுப்புகளைச் சற்று கவனிப் போம். அழகாக இருந்தாலும் சரியாக ஓடுகின்றதா என்பதையும் கொஞ்ச காலம் பார்ப்போம். அதிலுள்ள முட்களை மாற்றி அதே இடத்தில் புதிய முள்கள் போடவேண்டியிருந்தால் தேர்தல் (எலெக் ஷன்) காலத்தில் போடுவோம். சின்னஞ் சிறு கோளாறுகளைக் கண்டு மனம் கலங்காம லிருப்போம். கொஞ்சம் பழகினால் நிதான மாக ஓடலாம். அப்படிப் பொறுமையுடன் இருந்தும் கோளாறுகள் அதிகரித்துக் கொண்டே இருந்தால், இந்த அரசியல் கடி காரத்தை எறிந்துவிட்டு நமது லட்சியங் களுக்கு ஏற்ற, உதவிபுரியக்கூடிய வேறு ஒரு புதுக் கடிகாரம் செய்யும் சக்தியும் நம் மிடமே (இச்சட்டப்படிக்கே) இருக் கின்றது.

வெள்ளோட்டம்: அரசியல் நிர்ணய சபையால் அமைக்கப்பட்ட இச்சட்டத் திற்கு ஆங்கிலத்தில் "The Constitution of India" என்று பெயர். அதாவது "இந்தியாவின் அரசியலமைப்பு" என்பது. இச்சட்டத்தில் மொத்தம் 395 பிரிவுகளும் அதாவது ஷரத்துக்களும் (ஆங்கிலத்தில் 'ஆர்டிகிள்' என்று சொல்லப்படுவது) 8 ஜாப்தாக்களும் (ஷெடியூல்கள்) இருக் கின்றன. சாதாரண சட்டங்களில் உள்ள முகவுரையில் அச்சட்டம் எந்தச் சட்ட சபையால் நிறைவேற்றப்பட்டதென்றும், யாரால் அங்கீகரிக்கப்பட்டதென்றும், சட் டம் எதற்காகச் செய்யப்பட்டிருக்கிறதென் றும் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கும். இச்சட்டத்தின் முகவுரை கீழே கண்டபடி இருக்கின்றது. அதாவது:—

"இந்திய மக்களாகிய நாம் இந்தியாவை ஒரு சுதந்திர ஜனநாயகக் குடியரசாக அமைக்கத் தீர்மானித்து இந்திய பிரஜை கள் எல்லோருக்கும் நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் வழங்கவும், தேசத்தின் ஐக்கியத்தை உறுதி செய்யவும் நமது அரசியல் நிர்ணய சபை மூலம் 1949 நவம்பர் 26-ஆந் தேதியாகிய இன்று இந்த அரசியல் அமைப்பை நமக்கு நாமே இயற்றிச் சட்டமாக்கி அளித்துக்கொள் கிறோம்" - என்று இருக்கின்றது. முதல் ஷரத்து "1. இந்தியா என்ற பாரதநாடு, ராஜ்யங்களின் ஒரு ஐக்கியமாகும்" என்று ஆரம்பிக்கின்றது. 1 முதல் 4 ஷரத்துக் கள் இந்தியாவின் நிலப்பரப்பு எது என்று வர்ணிக்கின்றன. இந்தியப் பிரஜைகள் யார் என்று விவரித்து 7 ஷரத்துக்கள் இருக்கின்றன. அடிப்படையான அல்லது ஜீவாதார உரிமைகள் என்பவை எவை, அவைகளை எப்படி வற்புறுத்த முடியும் என்பவை 24 ஷரத்துக்களில் விவரிக்கப்படு கின்றன. அரசாங்கமும், சட்டசபை களும், சர்க்கார்களும் எந்த லட்சியங்க ளுடன் வேலை செய்ய வேண்டுமென்று 16 ஷரத்துக்கள் புத்தி கூறுகின்றன. இந்திய யூனியன் நிர்வாகம், ஜனாதிபதி தேர்தல், மந்திரிசபை அமைப்பு இவ்விஷயங்கள் 27 ஷரத்துக்களில் சொல்லப்படுகின்றன. இந் திய பார்லிமெண்ட் அமைப்பு, சட்டம் இயற்றும் விதம், இவைபற்றி 44 ஷரத்துக் களும், ஜனாதிபதி அவசரச் சட்டம் செய்ய லாம் என்று 1 ஷரத்தும், யூனியன் நீதி மன்றத்தைப்பற்றி 28 ஷரத்துக்களும் இருக் கின்றன. இச்சட்டத்தில் (ஏ) 'ராஜ்யங் கள்' என்று வழங்கப்படும் 9 மாகாணங்க ளாகிய மதராஸ், பம்பாய், பஞ்சாப், ஐக்கிய மாகாணம், அஸ்ஸாம், பீகார், வங்காளம், மத்ய மகாணம், ஒரிஸ்ஸா இவைகளின் நிர் வாகம், கவர்னர் நியமனம், மந்திரி சபை அமைப்பு, ராஜ்ய சட்டசபைகள் அமைப்பு, சட்டம் செய்யும் முறை, கவர்னர் அவசரச் சட்டம் செய்வது, ஹைகோர்டுகள் இவ் விஷயங்கள் 86 ஷரத்துக்களில் விஸ்தரிக் கப்படுகின்றன. இச்சட்டத்தில் (பி) ராஜ் யங்கள் என்று சொல்லப்படுபவை ஏற் கனவே சமஸ்தானங்களாக இருந்து இப்

போது ஒன்று சேர்க்கப்பட்டும், தனி ராஜ்யங்களாகவும் இருக்கும் 9ராஜ்யங்கள். இவற்றின் நிர்வாக விஷயங்கள் ஒரே ஒரு ஷரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, "ஏ-ராஜ்யங்களைப்பற்றிச் சொல்லப்பட்டது தான் இவைகளுக்கும் சட்டம். ஆனால், 'கவர்னர்' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'ராஜப் பிரமுகர்' என்று வாசிக்கவும்" என்று இருக்கிறது. (ஸி) ராஜ்யங்களாக கண்டிருக்கும் 10 இடங்களைப்பற்றி 4 ஷரத்துக்கள். அந்தமான் நிகோபார் (டி-பிரதேசம்) பற்றி ஒரு ஷரத்து; ஒதுக்கப்பட்ட இடங்களின் நிர்வாகத்தைப்பற்றி ஒரு ஷரத்து. இந்திய யூனியனுக்கும், ராஜ்யங்களுக்கும் சட்டம் செய்யும் அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொடுப்பவை 11 ஷரத்துக்கள். இந்திய யூனியனுக்கும், ராஜ்யங்களின் நிர்வாகத்திற்குமுள்ள தொடர்பைப்பற்றி 8 ஷரத்துக்கள். வரவு செலவு திட்டங்கள், வரி, கடன், சொத்து, விவகாரம் இவைகள் 37 ஷரத்துக்களிலும், உள்நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம் இவைகள் 7 ஷரத்துக்களிலும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப்பற்றி 16 ஷரத்துக்களிலும், எலெக்ஷன் விஷயம் 6 ஷரத்துக்களிலும், சலுகைகாட்டவேண்டியவர்களைப்பற்றி 13 ஷரத்துக்களும் இருக்கின்றன. இந்திய யூனியனிலும், ராஜ்யங்களிலும் வழங்க வேண்டிய அரசாங்க பாஷைகளைப்பற்றி 9 ஷரத்துக்கள். நெருக்கடி அல்லது அவசர காலங்களில் அரசியல் எப்படி மாறும் என்று 9 ஷரத்துக்கள். சில்லறை விஷயங்கள் 7 ஷரத்துக்கள்; தேவையானல் இந்த அரசில் அமைப்பின் ஷரத்துக்களை யார் மாற்றுவது, எப்படி மாற்றுவது என்று 1 ஷரத்து. பழைய சட்டம் போய் இந்த அரசியல் அமைப்புக்கு எப்படி மாற்றுவது என்பதைப்பற்றி 24 ஷரத்துக்கள், இச்சட்டத்தின் பெயர் என்ன என்பது 1 ஷரத்து. 26—1—1950-ல் அமுலுக்கு வரும் என்று ஒரு ஷரத்து. எந்தச் சட்டங்களை இது ரத்து செய்கின்றது என்பதுதான் கடைசி 395-ஆவது ஷரத்து.

**ஷெடியூல்கள்:** இச்சட்டத்தின் முடிவில் 8 ஜாப்தாக்கள் (ஷெடியூல்கள்) இருக்கின்றன. அவற்றின் விவரம்:—

1. இந்திய யூனியனில் அடங்கிய ராஜ்யங்களின் விவரம்.

2. ஜனதிபதி, கவர்னர்கள், மந்திரிகள், சட்டசபைத் தலைவர் சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட் நீதிபதிகள் முதலியவர்களுக்குள்ள சம்பளம்.

3. மந்திரிகள், நீதிபதிகள், சட்டசபை அங்கத்தினர் இவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டிய பிரமாணம்.

4. ராஜ்ய சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் எவ்வளவு என்று.

5. ஒதுக்கப்பட்ட இடங்களின் நிர்வாகம்.

6. அஸ்ஸாமில் உள்ள சில இடங்களின் நிர்வாகத்தைப்பற்றி.

7. இந்திய யூனியன் எந்தெந்த விஷயங்களில் சட்டம் செய்யலாம், ராஜ்யங்கள் எவ்விஷயங்களில் சட்டம் செய்யலாம், இருவரும் எவ்விஷயங்களில் சட்டம் செய்யலாம் என்பவை.

8. அரசாங்க பாஷைகள் விவரம்.

**இந்தியக் குடியரசின் நிலப்பரப்பு:** ஆங்கிலேயர் ஆட்சி புரிந்த காலத்தில் இந்தியாவில் 11 பிரிட்டிஷ் மாகாணங்களும் 562 சமஸ்தானங்களும் இருந்தன. பாகிஸ்தானிடம் சேர்ந்த மாகாணங்களும் சமஸ்தானங்களும் போக நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாகாணங்கள் 9-ம் நம்முடன் சேர்ந்த சமஸ்தானங்களும் இப்பொழுது "இந்திய யூனியன்" என்று சொல்லப்படும் இந்திய ஐக்கியமாகும். ஆனல் சமஸ்தானங்கள் பழைய உருவத்தில் இல்லை. இவைகளில் சுமார் 200 சமஸ்தானங்கள் மாகாணங்களுடன் சேர்ந்துவிட்டன. சுமார் 300 சமஸ்தானங்கள் ஒன்றோடொன்று இணைந்து கொண்டு இப்பொழுது 9 பெரிய ராஜ்யங்களாக இருக்கின்றன. அவைகளில் பழைய எல்லை மாறுமலும் வேறொன்றுடன் சேராமலும் இருப்பவை மைசூர், ஹைதராபாத், காஷ்மீர் இவை மூன்றுதான். இந்தச் சமஸ்தானங்களைத் தவிர இந்திய யூனியனல் நேரடியாக நிர்வாகம் செய்யப்படுபவை

டில்லி, குடகு, போபால், போன்ற 10 இடங்கள் இருக்கின்றன. இனி மாகாணங்களுக்கும், சமஸ்தானங்களுக்கும், மேலே சொன்ன தனி இடங்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் "ராஜ்யம்" என்று பெயர். ஆங்கிலத்தில் 'ஸ்டேட்" (State) என்பது. இந்திய யூனியன் என்பது மேலே கண்ட 28 "ராஜ்யங்கள்" அடங்கியது. இந்த 28 ராஜ்யங்களின் ஐக்கியம் என்று சொல்லலாம். இனி எந்த ராஜ்யமும் இந்திய யூனியனை விட்டு வெளியே போகமுடியாது. (காஷ்மீருக்கு மட்டில் தனி விதி.) ஆனால் ஒன்றுக்கொன்று எல்லை மாற்றிக் கொள்ளவும் புது ராஜ்யங்களாகவும் அமைத்துக் கொள்ள இடம் உண்டு. இவை தவிர புதுச்சேரி, காரைக்கால் போன்ற இந்தியாவிலுள்ள அயல் நாட்டுத் துண்டுகளும் இந்திய யூனியனில் சேர்ந்து கொள்ள வசதி இருக்கின்றது. இச்சட்டத்தில் இந்த 28 ராஜ்யங்களும் 1-வது ஜாப்தாவில் (A. B C.) ஏ. பி. ஸி. என்று மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பழைய பிரிட்டிஷ் மாகாணங்கள் A பகுதியாகவும், சமஸ்தானங்கள B பகுதியாகவும் மற்றத் துண்டுகள் C பகுதியாகவும் காட்டப்பட்டிருக்கின்றன. இவைகளின் விவரம்.

(A) **ஏ. ராஜ்யங்கள்:** (ஏற்கனவே மாகாணங்கள்) (1) அஸ்ஸாம் (2) மேற்கு வங்காளம் (3) பீஹார் (4) பம்பாய் (5) மத்திய மாகாணம் (6) மதராஸ் (7) ஒரிசா (8) கிழக்குப் பஞ்சாப் (9) ஐக்கிய மாகாணம்.

(B) **பி. ராஜ்யங்கள்:** (ஏற்கனவே சமஸ்தானங்கள்) (1) ஹைதராபாத் (2) காஷ்மீர் (3) மத்யபாரத் (4) மைசூர் (5) பாடியாலா (6) ராஜஸ்தான் (7) சௌராஷ்டிரம் (8) திருவாங்கூர் கொச்சி ஐக்கியம் (9) விந்தியப்பிரதேசம்.

(C) **ஸி. ராஜ்யங்கள்:** (1) அஜ்மீர் (2) போபால் (3) பிலாஸ்பூர் (4) கூச் பிஹார் (5) குடகு (6) டில்லி (7) ஹிமாசலப்பிரதேசம் (8) கட்ச் (9) மணிப்பூர் (10) திரிபுரா. (அட்டைப் படத்தில் எண் மட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது)

இவை தவிர D பிரிவில் அந்தமான், நிகோபார் தீவுகள் காணப்பட்டிருக்கின்றன. இவைகள் 'ராஜ்யங்கள்' அல்ல. ஆனால் இந்தியாவைச் சேர்ந்தவை.

## அரசியல் அமைப்பில் உள்ள ஸ்தாபனங்கள்:

| | |
|---|---|
| இந்திய யூனியன் உறுப்புகள்<br>(அகில இந்தியாவுக்கும் அவரவர் வரம்புக்குள் அதிகாரம் உண்டு) | 1. ஜனாதிபதி<br>2. இந்திய யூனியன் மந்திரி சபை<br>3. ராஜ்ய சபை<br>4. மக்கள் சபை<br>5. சுப்ரீம் கோர்ட்<br>6. ஆடிட்டர்ஜெனரல்<br>7. எலெக்ஷன் கமிஷன் |
| ஒவ்வொரு "ராஜ்யத்திற்கும்" உள்ள உறுப்புகள்<br>(அவரவர் ராஜ்ய எல்லைக்குள் அவரவர் வரம்புக்குள் அதிகாரம் உண்டு) | 1. கவர்னர் அல்லது ராஜப் பிரமுகர்<br>2. மந்திரிசபை<br>3. சட்ட சபை<br>4. மேல் சட்ட சபை (சில ராஜ்யங்களுக்கு மட்டில்)<br>5. ஹைகோர்ட் |

(இவ்விஷயங்கள் ஒவ்வொன்றைப்பற்றியும் தனித்தனியாக அடுத்துவரும் "வக்கீல்" இதழ்களில் விவரமாய் சொல்லப்படும்.)

**ஜனாதிபதி:** குடியரசுக்கு முடி சூடிய மன்னர் எவருமில்லை. வம்ச பாரம்பரையாக ஆட்சி புரியும் ராஜ வம்சமும் கிடையாது. மன்னருக்குப்பதில்தான் ஜனாதிபதி. மன்னருடைய மாட்சிமையும், அந்தஸ்தும். அதிகாரமும், கௌரவமும் ஜனாதிபதி என்ற பதவி வகிப்பவருக்கு, பதவி வகிக்கும் காலத்தில், உண்டு. அமெரிக்க ஜனாதிபதி பொதுமக்களின் (ஓட்) வாக்கினால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். இந்திய யூனியன் ஜனாதிபதியை யூனியன் சட்டசபை அங்கத்தினர்களும், எல்லா 'ராஜ்யங்களி'லுமுள்ள (கீழ்) சட்டசபை அங்கத்தினர்களும் சேர்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும். ஜனாதிபதி 5 வருடம் பதவி வகிப்பார். (முதல் ஜனாதிபதியை மட்டில் 26—1—1950-க்கு முன் அரசியல் நிர்ணய சபையே நியமிக்கும்.) குடியரசு நடப்பது

ஜனாதிபதியின் பெயரால். குடியரசு வந்ததும் கவர்னர் ஜெனரல் என்ற பதவி கிடையாது.

**ஜனநாயகம்:** இந்தியக்குடியரசு ஜனநாயக முறையில் நடைபெறும். பொதுஜனங்கள் எல்லோரும் அடிக்கடி கூடிக் கலந்து அரசியல் நடத்துவது எந்நாட்டிலும் அசாத்தியமான காரியம். அதுவும் இவ்வளவு பெரிய தேசத்தை, இவ்வளவு ஜனங்கள் அடங்கிய ஒரு நாட்டை அவ்விதம் எப்படி ஆளமுடியும். இதற்கு மற்றத் தேசங்களில் ஒரு வழி கண்டுபிடித்திருக்கின்றனர். அதைத்தான் நாமும் கைக்கொண்டிருக்கிறோம். அதாவது அந்தந்த இடங்களில் உள்ள மக்கள், ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பார்கள். தேசமெங்கும் தேர்தல் (எலக்ஷன்) நடைபெறும். 21 வயது பூர்த்தியான ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு (ஓட்) உண்டு. இதைத்தான் 'அடல்ட் பிராஞ்சைஸ்' அல்லது சர்வ ஜனவாக்கு என்பது. சர்வஜனவாக்கினால் நாம் இந்திய யூனியன் 'மக்கள் சபை" அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்போம். 7½ லக்ஷம் ஜனங்களுக்குக் குறைந்தது ஒரு பிரதிநிதியாவது இருப்பார். அவ்விதமே நமது மாகாண சட்டசபைக்கும் சுமார் 75 ஆயிரம் ஜனத்தொகை உள்ள இடங்களுக்கு ஒரு பிரதிநிதியாகத் தேர்ந்தெடுப்போம்.

அவ்விதம் நமக்கு நம்பிக்கையுள்ளவர்களை அல்லது இஷ்டப்பட்டவர்களைப் பொறுக்கி எடுத்தவுடன் குடி மக்களாகிய நம்முடைய கவலை, அதாவது இந்நாட்டை நாமே ஆண்டு கொள்ளவேண்டிய கவலை, அடுத்த எலக்ஷன் தினம் வரையில் கிடையாது. அது அந்தப் பிரதிநிதியைச் சேர்ந்தது. இதுதான் நேரடியாக மக்கள் உபயோகிக்கக்கூடிய ராஜாங்க அதிகாரம். இதைத்தவிர வேறு முறை சாத்தியமானதல்ல. இதற்கு ஆங்கிலத்தில் பிரதிநிதித்வ ஜனநாயகம் என்று சொல்வது. நாம் பொறுக்கி எடுத்த நமது இந்திய யூனியனின் பிரதிநிதிகள் அவர்களுக்குள் நம்பிக்கையுள்ளவர்களைக் கொண்டு அகில இந்தியாவுக்கும் ஒரு மந்திரிசபை அமைத்துக் கொண்டு இந்திய யூனியனை நிர்வாகம் செய்து வருவார்கள். அவ்விதமே நாம் பொறுக்கி எடுத்த மாகாண சட்டசபைப் பிரதிநிதிகள் தங்களுக்குள் ஒரு மந்திரி சபை அமைத்துக்கொண்டு இந்த மாகாணத்தின் ஆட்சியை நடத்துவார்கள். மந்திரி சபைகளைத்தான் 'சர்க்கார்' என்று சொல்வது. பொதுமக்கள் ஒன்றிரண்டு பெயர்களுக்கு இந்த இந்திய யூனியன் சர்க்காரோ, மாகாண சர்க்காரோ பிடிக்கவில்லையானால் ஒன்றும் செய்யமுடியாது. அத்துடன் இல்லை. மக்களின் பெரும்பான்மையோருக்குக்கூட திடீரென்று இந்திய யூனியன் சர்க்காரோ அல்லது மாகாண சர்க்காரோ பிடிக்கவில்லை என்றாலும் ஒன்றும் செய்யமுடியாது. ஒரு சட்டசபைப் பிரதிநிதியை நமக்கு (எலக்ஷனுக்குப் பிறகு) பிடிக்காவிட்டாலும் நாம் ஒன்றும் செய்ய முடியாது. அடுத்த எலெக்ஷன்வரை காத்திருந்து அவர்களுக்குத் தகுந்த படிப்பினை காண்பிக்கவேண்டும். இந்திய யூனியனின் மக்கள் சபைக்கு (ஹவுஸ் ஆப் தி பீபிள்) 5 வருடங்களுக்கு ஒருமுறை எலெக்ஷன் நடைபெறும். அவ்விதமே ராஜ்யங்களிலுள்ள கீழ் சட்டசபைகளுக்கும். இந்திய யூனியனில் உள்ள ராஜ்யசபையும், சில ராஜ்யங்களில் உள்ள மேல் சபையும் கலைக்கப்படமாட்டா. ஆனால் அவைகளில் உள்ள சுமார் 3-ல் 1 பங்கு அங்கத்தினர்களுக்கு இரண்டு வருடங்களுக்கொரு முறை எலெக்ஷன் நடைபெறும். சர்வ ஜனவாக்கினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஏதாவது பட படப்பாகச் சட்டங்கள் இயற்ற முற்பட்டால் இந்த மேல் சபைகள் அவைகளைக் கொஞ்சம் நிதானப்படுத்தலாம். அதற்குமேல் அச்சபைகளுக்கு அதிகாரமில்லை. இந்திய யூனியனில் மக்கள் சபையும் ராஜ்யங்களில் கீழ் சட்டசபைகளும்தான் சக்தி வாய்ந்தவை.

**தனித்தொகுதி மறைந்தது:** சுதந்திர இந்தியாவில் இனி முஸ்லீம்களுக்குத்தனித் தொகுதி கிறிஸ்துவர்களுக்குத் தனித் தொகுதி என்பது கிடையாது. எல்லோரும் சேர்ந்துதான் நமது பிரதிநிதிகளைப் பொறுக்கவேண்டும். நம் பிரதிநிதிகளும்

எந்த மதத்தைத்தழுவி இருந்தாலும் இருக்கலாம். ஆனால் சில காலங்களுக்கு ஹரிஜனங்களுக்கு மட்டில் சிலஸ்தானங்களைக்கட்டாயமாகக் கொடுத்து ஒரு சலுகை காண்பிக்கப்படும்.

**ஜீவாதார உரிமைகள்:** இந்திய அரசியல் திட்டத்தால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் சட்டசபைகளும், சர்க்கார்களும், சர்க்கார் அதிகாரிகளும் மக்களுக்குள்ள சில அடிப்படையான ஜீவாதார உரிமைகளைப் பறிக்கவும் குறைக்கவும் முடியாது. அவ்விதம் இந்த உரிமைகளை எடுத்தோ குறைத்தோ எந்த சட்டசபை சட்டம் செய்தாலும் எந்தச் சர்க்கார் அல்லது உத்தியோகஸ்தர் நடந்து கொண்டாலும் அது சட்ட விரோதமானது. இது வெறும் அலங்காரச்சொல் அல்ல. அவ்விதம் ஒரு இந்தியப் பிரஜைக்குள்ள ஜீவாதார உரிமை எந்தச் சட்டத்தாலாவது எந்த அதிகாரியாலாவது பறிக்கப்பட்டால் உடனே அதனால் பாதிக்கப்பட்டவர் நமது சுப்ரீம் கோர்ட் என்ற மாபெறும் நீதிமன்றத்தை நேரடியாகவே அண்டி அதற்குத்தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம். இதற்குப்பல முறைகளும் இருக்கின்றன. ஜீவாதார உரிமைகள் என்னவென்று இச்சட்டத்தின் 3-ஆவது பாகத்தில் வியக்தமாய்க் காணப்பட்டிருக்கின்றன. அவைகளின் சுருக்கம்:-

1. இந்தியப் பிரஜை எவரும் சமம். மக்களுக்குள் வித்தியாசம் காண்பிக்கக்கூடிய சட்டங்கள் செல்லமாட்டா.

2. ஜாதிமத வர்ண பேதங்களைக் கொண்டாவது ஆண் பெண் என்ற பேதங்களைக் கொண்டாவது சர்க்கார் ஒருவருக்கொருவர் வித்தியாசம் காண்பிக்கக்கூடாது. பொது இடங்களை வித்தியாசமில்லாமல் யாவரும் உபயோகிக்கலாம். சர்க்கார் உத்தியோகங்களிலும் மேற்கண்ட காரணங்களினால் ஒருவருக்கொருவர் வித்தியாசம் காண்பிக்க முடியாது.

3. தீண்டாமை என்பது ஒழிக்கப்பட்டுவிட்டது. நடைமுறையில் அதை அனுஷ்டிப்பது குற்றமாகும்.

4. ஒருவருக்கும் இனி பட்டங்கள் வழங்கப்பட மாட்டா.

5. ஒவ்வொருவருக்கும் பேச்சுச் சுதந்திரம் உண்டு.

6. மக்கள் ஆயுதமில்லாமல் அமைதியாகக் கூட்டம் கூடலாம்.

7. மக்கள் சங்கங்கள் அமைத்துக் கொள்ளலாம்.

8. இந்தியாவில் எங்கும் பிரயாணம் செய்யலாம்.

9. இந்தியாவில் எங்கும் குடியேறலாம்.

10. எவ்விதமான சொத்துக்களையும் சம்பாதித்தும் வைத்துக் கொண்டும் விநியோகமும் செய்யலாம்.

11. எவரும் எவ்விதமான தொழிலும், வியாபாரமும் நடத்தலாம்.

12. சட்டத்தை மீறுவதற்காக மட்டில்த்தான் தண்டனை. அதுவும் அப்படி மீறிய காலத்தில் அச்சட்டம் அனுஷ்டானத்தில் இருக்க வேண்டும்.

13. ஒரே குற்றத்திற்கு ஒருமுறைதான் குற்றம் சாட்டப்படலாம்.

14. சட்டப்படிக்கல்லாமல் எவருடைய உயிரையும் சொத்தையும் பறிமுதல் செய்ய முடியாது.


15. அரெஸ்ட் செய்யப்பட்டவருக்கு உடனே அதன் காரணங்கள் சொல்லப்பட வேண்டும்; 24 மணிக்குள் நீதிபதியிடம் ஆஜர்படுத்தப்படவேண்டும்; இஷ்டப்பட்ட வக்கீலைக் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவேண்டும்.

16. கட்டாய வேலை கிடையாது. 14 வயது பூர்த்தியாகாத குழந்தைகளை எந்தத் தொழிற்சாலையிலும் சுரங்கங்களிலும் அபாயமான இடங்களிலும் வேலைக்கு அமர்த்தக்கூடாது.

17. ஒவ்வொருவரும் இஷ்டப்பட்ட மதத்தைத் தழுவலாம், அப்யசிக்கலாம்; பரவச் செய்யலாம்.

18. பிரஜைகளில் எவ்வித மதப்பிரிவைச் சேர்ந்தவர்களும் அல்லது எப்பகுதியாரும் மத சம்பந்தமாயும் தர்மம் சம்பந்தமாயும் ஸ்தாபனங்கள் ஏற்படுத்திக்கொண்டு, அவை

187693




# உலகில்

இப்பகுதியில் இருப்பவை இன்னும் சட்டமாகாமல் சட்டசபையில் 'மசோதா' நிலைமையில் இருப்பவை.

## ஹிந்து சட்டத்தில் புரட்சிகரமான மாறுதல்கள்

இந்திய மக்களில் பெரும்பான்மையோர் ஹிந்துக்கள். ஹிந்துகளுக்குச் சொத்துரிமை, வார்சு பாத்தியம், விவாகம், சுவீகாரம், ஜீவனாம்சம் போன்ற பல முக்கிய விஷயங்களில் இப்பொழுது அனுஷ்டிக்கப் பட்டுவரும் சட்டத்திற்கு 'ஹிந்து லா" என்று ஆங்கிலத்தில் பெயர். அதாவது ஹிந்து சட்டம் எனச்சொல்லலாம். இந்த 'ஹிந்து சட்டம்' என்பது மற்ற பல முக்கிய சட்டங்களைப்போல எந்தச் சட்டசபைகளாலும் நிறைவேற்றப்பட்டதல்ல. இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் ஹிந்து சட்டம் என்ன என்று சொல்ல முடியும். இந்தியா முழுமையும் ஹிந்து சட்டம் எல்லா விஷயங்களிலும் ஒரே விதமாகவும் இல்லை. ஒரே விஷயத்தில் பிரதேசங்களுக்குத் தக்கவாறு வித்தியாசங்கள் இருக்கின்றன. பதினோராம் நூற்றாண்டில் வசித்த யாஞ்யவல்க்கியர் என்பவரால் எழுதப்பட்ட 'மிதாக்ஷரம்' என்ற சட்ட நூலைத் தென் இந்தியாவிலும் இன்னும் பல இடங்களிலும் ஆதாரமாகக்கொண்டு ஹிந்து சட்டம் வழங்கப்படுகின்றது. வங்காளத்தில் ஜீமூதவாஹனர்என்பவர் எழுதி இருக்கும் 'தாயபாகம்' என்ற நூலையும் மேற்கு இந்தியாவில் நீலகண்டர் என்பவருடைய 'விவகார மயூகம்" என்ற நூலையும் ஆதாரமாகக் கொண்டு சட்டம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த நூல்களில் உள்ளபடியே அந்தந்தப் பிரதேசங்களில் சட்டம் வழங்கப்படுவது என்பதுமில்லை. இவைகளை ஆங்காங்கே ஆதாரமாகக் கொண்டு உயர்தர நீதிமன்றங்கள் தீர்ப்புச் செய்திருக்கின்றனர். முக்கியமாய் இத்தீர்ப்புக்களே இப்பொழுது அனுஷ்டானத்திலிருக்கும் ஹிந்து சட்டத்திற்கு ஆதாரம் என்று சொல்லலாம். இவ்விதம் உள்ள ஹிந்து சட்டம் ஒரு பெரிய கடல், சுமார் 30 கோடி மக்களின் சட்டம். இச் சட்டத்தில் இங்குமங்கும் சிற்சில விஷயங்களில் சட்டசபைகளும் தலையிட்டு இரண்டொரு விஷயங்களைப்புதிய சட்டங்களால் மாற்றியுமிருக்கின்றனர். ஆனால் இதுவரை 'ஹிந்து சட்டத் தொகுப்பு' என்று இந்தி

---

களுக்குச் சொத்துச் சேர்த்து நிர்வாகம் செய்து கொள்ளலாம்.

19. சர்க்கார் பள்ளிக்கூடங்களில் மத சம்பந்தமான உபதேசம் கூடாது. சர்க்கார் உதவியைக் கொண்டு நடத்தப்படும் பள்ளிக்கூடங்களிலும் எவரும் மத சம்பந்தமான உபதேசங்களை கேட்கவேண்டுமென்று வற்புறுத்த முடியாது.

20. கல்வி ஸ்தாபனங்களில் சேர்வதை மத சம்பந்தமான காரணங்களினால் தடை செய்யக்கூடாது.

21. சிறுபான்மையோர் இஷ்டப்பட்ட கல்வி ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இவைதான் முக்கியமான ஜீவாதார உரிமைகள். ஆனால் இவ்வுரிமைகளைப் பற்றி பல நிபந்தனைகளும் இருக்கின்றன.

அடுத்து வரும் இதழ்களில் விபரமாயும் ஒவ்வொன்றும் ஆராயப்படும்.

யாவிலுள்ள எல்லா இடங்களிலும் எல்லா ஹிந்துக்களுக்கும் அமுலில் இருக்கும்படி யாதொரு சட்டமும் செய்ததில்லை. அக் குறையை நீக்கவும் சமூகச் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடனும் இப்போது இருக்கும் மத்திய சர்க்கார் இந்திய பார்லிமெண்டில் ஒரு முக்கிய மசோதா கொண்டு வந்திருக்கின்றனர். அதற்கு 'ஹிந்து சட்டத் தொகுப்பு மசோதா' என்று பெயர். இப்பொழுது இந்திய யூனியன் பார்லிமெண்டில் விவாதிக்கப்பட்டு வருகின்றது. இச்சட்ட விஷயத்தில் தலைவர்கள் ஒருவருக்கொருவர் மாறுபட்ட அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கின்றனர். சட்டம் விவாதிக்கப்படும் பொழுது சட்டசபைக்குள்ளும் வெளியிலும் பொதுஜனங்களுள் ஒரு பகுதி இதற்குச் சாதகமாகவும் ஒரு பகுதி விரோதமாகவும் ஆர்ப்பாட்டங்கள் செய்து வருவதை நேயர்கள் தினசரிப் பத்திரிகைகளில் படித்திருக்கலாம்.

இவ்விதம் புதிதாகக் கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதா சட்டமானால் ஹிந்துக்களின் வாழ்க்கையில் ஒரு பெரும் புரட்சிகரமான மாறுதல் ஏற்படும். இம்மாறுதல் எவையென்று பார்ப்போம்.

**பிரிபடாத ( அவிபக்த ) குடும்பம் என்பது போய்விடும்:** இப்பொழுது பெரும்பான்மையான ஹிந்து குடும்பங்கள் பிரிபடாத அல்லது அவிபக்த குடும்பங்களாகவே இருக்கின்றன. 'குடும்பச் சொத்து' என்பது தகப்பனுக்கு மட்டில் பாத்தியமுள்ள சொத்தல்ல. 'குடும்பச் சொத்தில்' அவருடைய மகன்களுக்கும், பேரன்களுக்கும், பேரன்களுடைய மகன்களுக்கும் கூடப் பாத்தியம் உண்டு. பிரிபடாத குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தவுடன் (சொல்லப்போனால், தாயின் வயிற்றில் ஜனித்தவுடன்) அக்குழந்தைக்கும் 'குடும்பச் சொத்தில்' பாத்தியம் ஏற்படும். ஆனால் எந்தப் பாகஸ்தரும் இஷ்டப்படும் காலத்தில் குடும்பத்தைவிட்டுப் பிரிந்து போகலாம்; தன் வீதத்தைப் பாகம் செய்து கொள்ளலாம். அப்படி ஒருவர் தம்முடைய தகப்பன் சகோதரர் இவர்களிடமிருந்து பாகம் செய்துகொண்டு தனியே போனாலும் அவருக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகளுக்கு அவருடைய சொத்தில் பாத்தியம் ஏற்படும். அதாவது அவரும் அவருடைய குழந்தையும் சேர்ந்து ஒரு புதுக் குடும்பமாகும். மறுபடியும் அச்சொத்துக்கள் 'குடும்பச் சொத்துக்கள்' என்றே வழங்கப்படும். இவ்விதம் குடும்பச் சொத்து என்பது வாழையடி வாழையாக பெரிதாகியும், சிறிதாகியும், மாறி மாறியும் தோன்றிமறையும். இப்புதுச்சட்டம் இவைகளுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்கும். இம்மசோதா சட்டமானால் பிரிபடாத (அவிபக்த) குடும்பமும் 'குடும்பச் சொத்து' என்பதும் இருக்காது. சட்டம் அமுலுக்கு வரும் தேதியில் உள்ள எல்லாப் பிரிபடாத (அவிபக்த) குடும்பங்களும் இச்சட்டத்தால் பிரிபட்டவையாக ஆகும். பாகபத்திரம் வேண்டியதில்லை. பாக வியாஜ்யமும் போடவேண்டியதில்லை. இச்சட்டமே ஒரே நாளில் இந்தியாவிலுள்ள எல்லா அவிபக்த குடும்பங்களிலும் ஒரு பாகப் பிரிவினை ஏற்படுத்தி விடும். சொத்துக்களைப் பிறகு நல இளம் சரிக்கட்டி பிரித்துக்கொண்டாலும் பாகஸ்தர் ஒவ்வொருவருக்கும் அச்சொத்தில் எவ்வளவு பாகம் உண்டோ அதற்கு அவர் ஏகதேச உரிமையுள்ளவராவார். அந்தப் பங்கில் மற்றப் பாகஸ்தர்களுக்குப் பாத்தியம் இருக்காது. இனி அவருக்கு ஆண் குழந்தை பிறந்தாலும் அக்குழந்தைக்கு அவர் உயிர் உள்ள வரை யாதொரு பாத்தியமும் ஏற்படாது. தம்முடைய பாக சொத்தை அவர் உயிர் இருக்கும்போது இஷ்டப்படி எவ்விதமான பராதீனமும் எவ்வித விநியோகமும் செய்யலாம். மரண சாசனம் என்ற உயில் மூலமாகவும் அதை எவருக்கும் கொடுத்துவிடலாம். அவருடைய ஆண் குழந்தை யாதொரு 'மைனர் வியாஜ்யமும்' செய்ய முடியாது. அவர் இறந்துவிட்டால் இச்சட்டப்படிக்குள்ள வார்சுகள் அச்சொத்தை அடைவார்கள்.

**வார்சுகள்: மகன், மகள், மனைவி, மருமகள் யாவருக்கும் பாத்தியமுண்டு:** ஒரு ஹிந்து இறந்தால் அவருடைய சொத்துக்களை அடையும் வார்சுகள் யார் என்ற விஷ

யத்தில் இம்மசோதா ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்தும். இப்பொழுது இருக்கும் சட்டப்படி இறந்தவருக்கு மகன் இருந்தால் அவருடைய சொத்துக்களை மகன்தான் வார்சாக அடைவார். சில வருடங்களுக்கு முன் இறந்தவருடைய சம்சாரத்திற்கு ஒரு பங்கு ஏற்படுத்தி ஒரு சட்டம் செய்யப்பட்டது. அதாவது தம்முடைய மகனுக்கு எவ்வளவு பங்கோ அதுபோலவே அவளுக்கும் ஒரு பங்கு உண்டு. ஆனால் அதை அவள் தன் ஆயுசுவரையில்தான் அனுபவிக்கலாம் என்று இருக்கிறது. இப்பொழுது விவாதத்திலிருக்கும் மசோதா சட்டமானால் இறந்தவருடைய சொத்துக்களைக் கீழ்கண்ட வார்சுகள் எல்லோரும் அடைவார்கள். இறந்தவருடைய

1. மகன்.
2. மனைவி.
3. மகள்.
4. அவருக்கு முன்பே இறந்து போன மகனுடைய மகன் (பேரன்).
5. அவருக்கு முன்பே இறந்துபோன மகனுடைய மனைவி (அதாவது மருமகள்).
6. அவருக்கு முன்பே இறந்து போன மகனுடைய மகனும் (பேரனும்) இறந்து போயிருந்தால் அப்பேரனின் மகன்.
7. மகனும் பேரனும் இறந்து போயிருந்தால் பேரனின் மனைவி.

இவர்கள் எல்லோரும் இருந்தால் எல்லோருக்கும் சொத்தில் பங்கு உண்டு. மருமகள்களுக்கு பாதிப்பங்கு; மற்றவர்களுக்குச் சமபங்கு. இதை ஒரு உதாரணத்தைக்கொண்டு நன்கு விளக்கலாம்.

உதாரணம்: இறந்து போகும் ஒரு ஹிந்துவுக்கு கீழ்க்கண்ட உறவினர் இருக்கின்றனர். (1) மனைவி (2) ஒரு மகன் (3) ஒரு மகள் (4) அவருக்கு முன்பே இறந்த ஒரு மகனுடைய மனைவி, அதாவது இறந்தவருடைய மருமகள். இறந்தவருக்கு ரூ. 7000 பொறுமான சொத்துக்கள் உண்டு. புதிய மசோதா சட்டமானால் இறந்தவருடைய சொத்தில் மனைவி ரூ. 2000, மகன் ரூ. 2000, மகள் ரூ. 2000, மருமகள் ரூ. 1000 அடைவார்கள். மருமகள் மட்டில் மகன் அடைவதில் பாதிப்பங்கை அடைவாள். மற்றவர்கள் எல்லோருக்கும் சம பங்கு.

**ஸ்தீரீகள் அடையும் சொத்தும் அவர்களுக்கு சர்வ சுதந்திர பாத்தியமானது:** இப்பொழுது இருக்கும் சட்டப்படி ஒருவருடைய சொத்தை மனைவி அடைந்தாலும், மகனில்லாவிட்டால் மகள் அடைந்தாலும் அவர்கள் தங்கள் ஆயுசுவரை அச்சொத்தை அனுபவிக்கலாமே ஒழிய அவர்கள் அச்சொத்தை இஷ்டப்படி விற்கச்சுட முடியாது. புதிய சட்டத்திற்குப்பிறகு ஸ்திரீகள் அடையும் சொத்து அவர்களுக்கு ஏகதேச சொந்தமானது. அவர்கள் இஷ்டம் போல் பாராதீனமும் விநியோகமும் செய்யலாம். சொத்தை அடைவது மனைவியானாலும், மகளானாலும், மருமகளானாலும் அப்படியே.

**மற்ற வார்சுகள்:** இறந்தவருக்கு இதற்குமுன் சொல்லப்பட்ட ஏழுவகை உறவினர்கள் ஒருவரும் இல்லாவிட்டால் கீழ்க்கண்ட வரிசைக் கிரமமாய் உள்ள உறவினர்கள் அவருடைய சொத்தை அடைவார்கள்.

முதல் வரிசையில் இருப்பவர்கள் இல்லாவிட்டால் இரண்டாவது வரிசையில் இருப்பவர்கள்தான் வார்சு. முதல் இரண்டு வரிசைகளிலும் ஒருவரும் இல்லாவிட்டால் மூன்றாவது வரிசையிலிருப்பவர் வார்சு. இப்படியே மற்ற வரிசைகளிலிருப்பவருக்கும். ஒரே வரிசையில் பல உறவினர்கள் இருந்தாலும் எல்லோருக்கும் சம பங்கு உண்டு.

வரிசை

1. தகப்பன்; தாய்.
2. மகனின் பெண்; பெண்ணின் மகன்; பெண்ணின் பெண்.
3. மகனின் பெண்ணின் மகன்; மகனின் மகனின் பெண்; மகனின் பெண்ணின் பெண்; பெண்ணின் மகனின் மகன்; பெண்ணின் மகனின் பெண்; பெண்ணின் பெண்ணின் மகன்; பெண்ணின் பெண்ணின் பெண்.

4. சகோதரர்; சகோதரி.

5. சகோதரரின் மகன்; சகோதரியின் மகன்; சகோதரரின் மகள்; சகோதரியின் மகள்.

6. தகப்பனின் தகப்பன்; தகப்பனின் தாய்.

7. தகப்பனின் மனைவி; சகோதரரின் மனைவி.

8. தகப்பனின் சகோதரர்; தகப்பனின் சகோதரி.

9. தாயின் தகப்பன்; தாயின் தாய்.

10. தாயின் சகோதரர்; தாயின் சகோதரி.

இவ்வித உறவினர்கள் ஒருவரும் இல்லாவிட்டால் பங்காளி (தாயாதி) களுக்குப் போகும்; இவர்களும் ஒருவரும் இல்லாவிட்டால் பந்துக்களுக்குப் போகும். இவை பின்பு விபரமாய்ச் சொல்லப்படும்.

**ஸ்திரீகளின் சொத்துக்கு வார்சுகள்:** ஒரு ஸ்திரீ இறந்தால் அவளுடைய சொத்துக்களை அவளுடைய புருடன், மகன், மகள் இவர்கள் எல்லோரும் சமபாகமாக அடைவார்கள். புருடனில்லாவிட்டால் ஒவ்வொரு மகனும் மகளும் சமபாகமாக அடைவார்கள். இறந்த மகன், மகளுடைய குழந்தைகளும் அடைவார்கள். மகன் மகள் அல்லது அவர்களுடைய குழந்தைகள் ஒருவரும் இல்லாவிட்டாலும் எல்லாச் சொத்துக்கும் புருடனே வார்சு ஆவான். புருடனும் இல்லாவிட்டால் தாய் தகப்பன் இருவரும் சம உரிமையுள்ள வார்சுகள். அவர்களும் இல்லாவிட்டால் புருஷனுடைய வார்சுகள் அடைவார்கள். அவர்களும் இல்லாவிட்டால் தாயாரின் வார்சுகளும்; அவர்களும் இல்லாவிட்டால் தகப்பனின் வார்சுகளும் அடைவார்கள்.

**விவாகம்:** இம்மசோதா சட்டமானால் ஹிந்துக்கள் பழைய வழக்கப்படி (வைதிக முறைப்படி)யும் மணம் செய்து கொள்ளலாம்; அல்லது 'சிவில் மாரியேஜ்' என்ற பதிவு மணமும் செய்து கொள்ளலாம். பழைய வழக்கப்படி நடக்கும் விவாகங்களும் ரிஜிஸ்டர் செய்து கொள்ளப்பட வேண்டுமென்று மாகாண சர்க்கார் வற்புறுத்தலாம். பதிவு மணம் என்பது இப்போதுள்ள ரிஜிஸ்டர் விவாகத்தைப்போல் ரிஜிஸ்ட்ரார் முன்பு மணமகனும் மணமகளும் ஆஜராகிப்பதிவு செய்து கொள்ள வேண்டும். இதற்குப்பல விதிகள் இருக்கின்றன. விவாக ரத்துக்கும் பல விதிகள் இருக்கின்றன.

**சுவீகாரம்:** பதினெட்டு வயது பூர்த்தியான ஒரு ஹிந்து சுவீகாரம் செய்து கொள்ளலாம். ஆனால் சுவீகாரம் செய்து கொள்ள, தம் மனைவியின் சம்மதம் வேண்டும். இரண்டு மனைவிகள் இருந்தால் ஒருவளுடைய சம்மதமாவது வேண்டும். ஆனால் மனைவி மைனராக இருந்தாலும் பைத்தியமாக இருந்தாலும் இச்சம்மதம் தேவையில்லை. புருஷனை இழந்த ஒரு ஸ்திரீயும் தம் இஷ்டப்படி தம் புருஷனுக்கு ஒரு மகனைச் சுவீகாரம் செய்து கொள்ளலாம். தாயாதி அல்லது பங்காளிகளின் சம்மதம் வேண்டியதில்லை. ஆனால் அவள் சுவீகாரம் எடுத்துக்கொள்ளக்கூடாதென்று புருடனால் தடுக்கப்பட்டிருந்தால் மட்டில் அவள் சுவீகாரம் செய்து கொள்ள முடியாது. தன்னுடைய சம்சாரம் தனக்குப்பிறகு ஒரு ஸ்வீகாரம் செய்துகொள்ளலாமென்றாவது, செய்து கொள்ளக் கூடாதென்றாவது ரிஜிஸ்டரான தஸ்தவேஜி மூலம் அல்லது 'உயில்' என்ற மரண சாசனத்தின் மூலம்தான் புருஷன் சொல்லலாம். ஆனால் அந்த ஸதிரீ மறு விவாகம் செய்துகொண்டாலும் வேறுமதத்தைத் தழுவினாலும் சுவீகாரம் செய்து கொள்ள முடியாது. மேலும் தன்னுடைய புருஷனுடைய மகன் இறந்து போய் அவனுக்கு ஒரு மகனாவது மருமகளாவது இருந்தாலும் சுவீகாரம் செய்து கொள்ளமுடியாது. சுவீகாரம் செய்து கொள்ளப்படும் பையனின் தகப்பன் தாய் இருவரும் அம்மகனை வேறு ஒருவருக்குச் சுவீகாரம் கொடுக்கச் சம்மதிக்கவேண்டும். ஆனால் புருஷன் இறந்து விட்டாலும், சன்னியாசியாகப் போய்விட்டாலும், வேறு மதத்தைத் தழுவி விட்டாலும், சம்மதம் கொடுக்கச் சக்தியற்றவராக இருந்தாலும் தாயாரே சம்மதம் கொடுக்கலாம். ஆனால் அவ்விதம் கொடுக்கக்கூடாதென்று புருஷன் ரிஜிஸ்டர் தஸ்தவேஜி அல்லது உயில் மூலம் தடுக்க




[இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட்டிலும் பல மாகாணங்களிலுள்ள ஹைகோர்ட்டுகளிலும் சமீபத்தில் நடந்த வழக்குகளில் உயர் நீதிபதிகளால் அளிக்கப்பட்ட சில தீர்ப்புக்களின் முக்கிய அம்சங்களை நமது நேயர்கள் வாசிக்கலாம். அடிப்படையான சட்ட தத்துவங்களை விளக்கும் இங்கிலாந்திலுள்ள நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் இங்கே காணலாம். தொழிற்சாலைகள் சட்டம், ஷாப் சட்டம் இவைகளின்படி முடிவான தீர்ப்பளிக்க அதிகாரம் பெற்ற அதிகாரிகளின் தீர்ப்புகளும் சேர்க்கப்படும்.]

## வேறு ஒருவர் நிலத்தில் ஒருவர் வீடுகட்டினல்

**கோர்ட்:** சென்னை ஹைகோர்ட்
**நீதிபதி:** நீதிபதி கோந்த மேனன் அவர்கள்
**ஆதாரம்:** (62 லா வீக்லி - பக்கம் 741)

உங்களுக்கு ஒரு காலி நிலம் இருக்கின்றது. அதை வேறு ஒருவர் தம்முடையதென்று உண்மையாகவே நினைத்து, அதில் தம்முடைய பணத்தைச் செலவு செய்து ஒரு வீடு கட்டி வருகிறார். அவர் தவறாகச் செய்து வருவதை உணர்ந்த நீங்கள் அவர் அப்படிச் செய்வதைத் தடுக்காமலும், பின்பு அந்த வீட்டுடன் உங்கள் நிலத்தை எடுத்துக்கொண்டு விடலாமென்றும் நினைத்துச் சும்மா இருந்துவிட்டீர்களானல், நீங்கள் தான் ஏமாந்து போய்விடுவீர்கள். ஏனென்றால் வீடு கட்ட அவர் ஆரம்பிக்கு முன்னமேயோ, ஆரம்பித்த உடனேயோ, நீங்கள் அவரிடம் காலி நிலம் உங்களுடையதென்பதைச் சொல்லி, அவர் பணம் செலவழிக்குமுன், அவரைத் தடுக்கவேண்டிய கடமை உங்களிடம் இருக்கின்றது. அதை நீங்கள் செய்யத் தவறியதால்தான் வேறு ஒருவர் பணம் செலவழித்து வீடுகட்டினர். அச்சந்தர்ப்பத்தில் உங்கள் காலி நிலத்திற்குள்ள நியாய விலையை மட்டில் வீடு கட்டியவர் கொடுத்துவிட்டால் நிலம் வீடு இரண்டும் அவருடையதாகிவிடும். காலி நிலத்தின் நியாய விலையைக்கூட அவர் கொடுக்க மறுத்தால் நீங்கள் கட்டப்பட்ட வீட்டின் நியாய விலையைக் கொடுத்து வீட்டை எடுத்துக் கொள்ளநேரிடும். ஆனல் வீடு கட்டியவர், நிலம் தம்முடையதல்ல என்று தெரிந்திருந்தும், அல்லது தடுக்கப்பட்ட பிறகும், பணம் செலவழித்துக் கட்டிடம் கட்டிக் கொண்டே போனல் அவருக்குச் சட்டம் உதவி செய்யாது.

---

லாம். ஒருவரும் ஒரு பெண்ணைச் சுவீகாரம் எடுத்துக் கொள்ளமுடியாது. சுவீகாரம் எடுத்துக்கொள்ளப்படும் பையன் ஹிந்துவாயும் 15 வயது பூர்த்தி ஆகாமலும், கலியாணமாகாதவராயும், வேறு ஒருவரால் அதற்குமுன்பே சுவீகாரம் எடுத்துக் கொள்ளப்படாதவராயும் இருக்க வேண்டும். ஆனல் சுவீகாரம் எடுத்துக் கொள்ளப்படுபவர் ஒரே மகனாக இருந்தாலும் மூத்த மகனாக இருந்தாலும் உறவினரல்லாமலிருந்தாலும் சுவீகாரம் செல்லும். சுவீகாரம் செய்யச் சுவீகாரப் பையன் தகப்பன் அல்லது தாயால் சுவீகாரம் எடுத்துக் கொள்பவருக்கு (கையால் பிடித்து அல்லது தூக்கி) கொடுக்கப்பட்டால் போதும். தத்த ஹோமம் அவசியமில்லை.

இந்திய யூனியன் பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்டு கடுமையான விவாதத்திலிருக்கும் மசோதாவின் முக்கிய விஷயங்களை மேலே கொடுத்திருக்கிறோம். இவை அப்படியே சட்டமாய்விடுமென்பதற்கில்லை. மாறுதல்கள் ஏற்படலாம். அப்படி மாறுதலாகும் விஷயங்களையும் நேயர்கள் அவ்வப்பொழுது "வக்கீல்" மூலம் தெரிந்து கொள்ளலாம்.

## பெண்ணுக்கு மணம் செய்து வைக்க வேண்டிய கடமை தகப்பனுக்கு சட்டப்படி உண்டா?

---

கோர்ட்: சென்னை ஹைகோர்ட்

நீதிபதிகள்: நீதிபதி விசுவநாத சாஸ்திரி அவர்கள்

ஆதாரம்: 1949 (2) மதராஸ் லா ஜர்னல் பக்கம் 732

சூரியநாராயணுவின் மூத்த சம்சாரம் சுந்தரம்மா என்பவள் 1936 முதல் தம் புருஷனுடன் வசிக்காமல் தம்முடைய மூன்று பெண்களுடன் தனியே வசித்து வந்தாள். தமக்கும் தம்முடைய பெண்களுக்கும் காலக்ஷேபம் செய்யப் புருஷன் மீது டிக்ரியும் வாங்கி இருந்தாள். சூரிய நாராயணு இரண்டாவது விவாகம் செய்து கொண்டு அம்மனைவியுடன் வசித்து வந்தார். சுந்தரம்மாவின் மூத்த மகளுக்குக்கலியாணம் செய்யவேண்டிய வயது வந்ததும் 1942-ல் சுந்தரம்மாவே அவளுக்குக்கலியாணம் செய்து வைத்தாள். தகப்பன் சூரியநாராயணு இக்கலியாணத்தில் கலந்து கொள்ளவும் இல்லை. யாதொரு அக்கரையும் காண்பிக்கவில்லை. கலியாணமான பிறகு கலியாணத்திற்காகச் செலவான ரூ. 1000-ம் தம் புருஷனிடமிருந்து கிடைக்கவேண்டுமென்று முன்சீப் கோர்ட்டில் சுந்தரம்மா வழக்குத் தொடர்ந்தாள். முன்சீப் கோர்ட்டில் வழக்கு அவளுக்குச் சாதகமாயிற்று. புருஷன் சப் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில் அவர் யாதொரு தொகையும் கொடுக்க வேண்டியதில்லை என்று அப்பீல் புருஷனுக்குச் சாதகமாயிற்று. சுந்தரம்மா ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தாள். இந்த வழக்கில் ஒரு முக்கிய பிரச்னையைத் தீர்க்கும்படி ஏற்பட்டது. அதாவது ஹிந்து சட்டப்படி ஒருவருக்குக்குடும்பச் சொத்துக்கள் இருந்தால் மட்டில் அச்சொத்துகளிலிருந்து, அக்குடும்பத்தில் உள்ள பெண்களின் கலியாணச் செலவுகளைச் செய்ய வேண்டியது கட்டாயமே ஒழிய, யாதொரு குடும்ப சொத்துமில்லாமலிருப்பவர் தம்முடைய பெண்ணுக்கு விவாகம் செய்து வைக்கவும் அதற்காகச் செலவு செய்யவும் கடமைப்பட்டவரா? அவ்வித கடமை சட்டத்தில் இருந்தால், கலியாணச் செலவுகளை முதலில் செலவு செய்தது தம் மனைவியாக இருந்தாலும் அவளுக்கு அதைத் திருப்பிக் கொடுக்கப் பெண்ணின் தகப்பன் கடமைப்பட்டவர். நீதிபதி பல ஆதாரங்களைப் பரிசிலனை செய்து கடைசியில் 1902-ஆம் வருடத்தில் சென்னை ஹைகோர்ட்டில் ஏற்பட்டிருந்த ஒரு தீர்ப்பைப்பின்பற்றி, குடும்ப ஐவேஜி இல்லாவிட்டால் ஹிந்து தகப்பனர் தம்முடைய பெண்ணுக்குக் கலியாணம் செய்து வைக்கச் சட்டப்படி கடமைப்பட்டவரல்ல என்றும் ஆகையால் சூரியநாராயணு யாதொரு தொகையும் கொடுக்க வேண்டியதில்லை என்றும் தீர்ப்பளித்தார். சென்னை ஹைக்கோர்ட்டாரின் முந்திய தீர்ப்புகளைத்தாம் அனுசரிக்கவேண்டியிருப்பதால் இவ்விதம் தமக்குச் சொந்த முறைமையில் பிடிக்காத விதம் முடிவு செய்யும்படி நேர்ந்ததாக நீதிபதி கடைசியில் சொல்லி இருக்கின்றார்கள்.

[சொத்துக்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒருவர் தம்முடைய சிசுக்குழந்தைகளையும் வயது முதிர்ந்த பெற்றோர்களையும் சம்ரட்சிக்கச் சட்டப்படி கடைப்பட்டிருக்கின்றார். அவ்விதமே ஹிந்துக்களுடைய பழக்க வழக்கப்படிக்கும் தம்முடைய பெண்ணுக்கு விவாகம் செய்து வைக்கத் தகப்பனுக்கு ஒரு கடமை இருப்பதாகவே தோன்றுகின்றது. ஆனால் இக்கடமை சட்டப்படிக்கு உண்டா என்பதை இன்னொரு சந்தர்ப்பத்திலாவது நமது நீதிபதிகள், பழைய தீர்ப்புக்களையும் தேவையானல் மாற்றும் சக்தியுள்ள ரீதியில் கூடி இவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்வார்களென்று எதிர்பார்க்கலாம்.]

## உங்கள் மரம் சாலையின் அருகில் இருந்தால்

**ஆதாரம்:** (1949—1 ஆல் இங்கிலாண்டு லா ரிபோர்ட்ஸ் - பக்கம் 874)

உங்களுடைய தோட்டம் ஒரு சாலைக்கருகில் இருந்து அத் தோட்டத்திற்குள்ளிருந்த ஒரு தென்னை அல்லது பனை மரம் திடீரென்று சாலையில் ஓடிக் கொண்டிருந்த ஒரு மோட்டார் மீது விழுந்து, அந்த மோட்டாருக்கும் அதில் இருந்த அதன் சொந்தக்காரருக்கும் சேதம் ஏற்படுத்தினால் நீங்கள் மோட்டாரின் சொந்தக்காரருக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமா? இவ்வித மான ஆபத்திற்குள்ளான கேமினர் என்ற ஆங்கிலேயரால் நஷ்டஈடு கிடைக்கத் தொடரப்பட்ட ஒரு வழக்கில் நீதிபதிகள் கீழ்க் கண்டபடி அபிப்பிராயப் பட்டனர்.

அதாவது: ஒவ்வொரு சொத்தின் சொந்தக்காரரும் பக்கத்தில் உள்ளவருக்கும் பக்கத்திலுள்ள சாலையில் நடமாடுகிறவர்களுக்கும் யாதொரு ஆபத்தும் நேரிடாவண்ணம் நிதானமான ஜாக்கிரதையுடன்தான் இருக்க வேண்டும். விழுந்த மரம் மிக வயதானதாக இருந்து அல்லது அதன் வேரில் வெளிப்படையான நோய் கண்டு விழக்கூடிய தறுவாயில் இருப்பதைத் தெரிந்துகொண்டும் கூட அதன் சொந்தக்காரர் அதை அகற்ற முன் ஜாக்கிரதை செய்யாமல் அலட்சியமாக இருந்திருந்தால் அவர் நஷ்டம் கொடுக்க கடமைப் பட்டவர். ஆனால், அவ்விதமில்லாமல் அம்மரம் திடீரென்று விழுந்துவிடக்கூடுமென்று சாதாரணமாய் எவரும் நினைக்கமாட்டார்கள் என்று இருந்தால், அம்மரம் விழுந்ததால் ஏற்படும் நஷ்டத்திற்கு அதன் சொந்தக்காரர் பொறுப்பாளி அல்ல, நஷ்டம் கொடுக்க வேண்டியதில்லை என்று நீதிபதிகள் அபிப்பிராயப் பட்டனர்.

## வீட்டுக்காரர் கேட்காவிட்டாலும் கெடுப்படி வாடகை கொடுத்து விடவேண்டும்

**கோர்ட்:** சென்னை ஹைகோர்ட்

**நீதிபதிகள்:** பிரதம நீதிபதி ராஜமன்னார் அவர்களும்
நீதிபதி கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும்

**ஆதாரம்:** (1949) 2. மதராஸ் லா ஜர்னல் சிறு குறிப்புக்கள்-பக்கம் 54.

ஜாகை வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தின்படி, குடியிருப்பவர் எந்த எந்த தேதியில் வாடகை கொடுக்கவேண்டுமென்று ஏதாவது ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் அத்தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் வாடகைத் தொகையைக் கொடுத்து விடவேண்டும். அப்படி யாதொரு ஒப்பந்தமுமில்லாவிட்டால் ஒவ்வொரு மாத வாடகையையும் அதற்கடுத்த மாத முடிவிற்குள் கொடுத்து விடவேண்டும். இவ்விதம் கெடுப்படி வாடகை கொடுக்கத் தவறினால் குடியிருப்பவரை அகற்ற ஜாகை வாடகை கண்ட்ரோலரிடம் மனுப்போடலாம். வீட்டின் சொந்தக்காரர் சரிவர வாடகை வசூல் செய்வதில்லை என்றும் அவருக்கு இஷ்டப்பட்ட காலங்களில் வந்து வாடகை வசூல் செய்வதுதான் வழக்கமென்றும், அதனால் சட்டப்படிக்குள்ள கெடுவில் வாடகை கொடுக்கப் படவில்லை என்றும் இவ்வழக்கில், குடியிருப்பவர் கட்சி சொன்னார். இக்கட்சியை நீதிபதிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. வீட்டின் சொந்தக்காரர் எப்பொழுது வாடகை வசூல் செய்யவந்தாலும், குடியிருப்பவர் சட்டப்படிக்குள்ள கெடுக்குள் வாடகையைக் கொடுக்கக் கடமைப்பட்டவரென்றும் அப்படி செய்யத் தவறினால் அவரை அகற்றலாமென்றும் அபிப்பிராயப் பட்டனர்.



# கேள்வியும் - பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே.

**கேள்வி:** (2185 கருப்பண்ணன் செட்டியார், கீழச்சிவல்பட்டி) மேஜர் பஞ்சாயத்துப்போர்டு எல்லைக்குள் மின்சார உதவி கொண்டு நடத்தப்படும் யந்திரங்களுக்கு மேற்படி பஞ்சாயத்துப்போர்டு தங்கள் இஷ்டம்போல் எவ்வளவு வேண்டுமானாலும் லைசென்சு கட்டணம் வசூலிக்க அதிகாரமுண்டா?

**பதில்:** ஒவ்வொரு பஞ்சாயத்துப் போர்டும் அதனதன் எல்லைக்குள் அமைக்கப்படும் யந்திரங்களுக்கு (அதன் யூனிட்டுக்குத்தக்கவாறு) எவ்வளவு லைசென்சு கட்டணம் கட்டவேண்டுமென்று விதிகள் செய்து கொள்ள அதிகாரம் இருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட யந்திரத்திற்கு அவ்விதியை அனுசரித்து லைசென்சு கட்டணம் வசூல் செய்யலாம். ஆனால் நியாயமில்லாமல் மிக ஜாஸ்தியாக லைசென்சு கட்டணம் விதித்தால் அது செல்லாதென்று சொல்லக் கோர்ட்டுகளுக்கு அதிகாரம் உண்டு.

**கேள்வி:** (L 2186 நஞ்சா கவுடர், நீலகிரி) ஒருவர் தம்முடைய கேசுக்காகக் கோர்ட்டுக்குப் போன இடத்தில் வேறு ஒரு கேசு சம்பந்தமான கோர்ட் சம்மனை ஜாரி செய்யலாமா?

**பதில்:** செய்யலாம்.

**கேள்வி:** (2198 ராமைய்யா, திருச்சி) பேக்டரி ஆக்ட்படி வாராந்திர விடுமுறையை மறுக்க முடியுமா?

**பதில்:** சாதாரணமாய் முடியாது. ஆனால் விடுமுறை விட வேண்டிய தினத்திற்கு முன்போ பின்போ மூன்று தினங்களுக்குள் ஒரு நாள் விடுமுறை கொடுத்து வாராந்திர விடுமுறையை மறுக்கலாம். அப்படி முன்போ பின்போ விடுமுறைவிடச் சில நிபந்தனைகள் உண்டு.

**கேள்வி:** (L அங்கமுத்து, ஈரோடு) மகனுடைய கையெழுத்தில்லாமல் தகப்பன் சொத்தை விற்பது செல்லுமா?

**பதில்:** இவ்விதம் கேட்கும் கேள்விகளுக்கு எப்படி சுருக்கமாய்ப் பதில் சொல்ல முடியும். தகப்பனும் மகனும் ஹிந்துவா, முஸ்லீமா வேறு மதமா? ஹிந்துவாக இருந்தால் விற்கப்படும் சொத்து தகப்பனால் சுயமாகச் சம்பாதிக்கப்பட்ட சொத்தா? அல்லது குடும்பப்பொதுச் சொத்தா? தகப்பனுக்கும் மகனுக்கும் பாகமாய்விட்டதா அல்லது ஒரே குடும்பமா? எதற்காகச் சொத்தைத் தகப்பன் விற்பனை செய்கிறார்? என்றெல்லாம் தெரிந்தால் பதில் சொல்லமுடியும்.

கேள்வி: (L 2221 கருப்பண்ணன் ஆசாரி, திருப்பூர்) புருஷனுடன் இல்லாமல் தனியே இருக்கும் மனைவி எத்தனை வருடத்திற்குள் ஜீவனாம்சம் கேட்க வேண்டும்?

பதில்: மனைவி தனியே வசித்துவரத் தக்கக் காரணங்கள் இருந்தால்தான் ஜீவனாம்சம் கேட்கலாம். அதற்குச் சாதாரணமாய் காலாவதி இல்லை. ஆனல் ஜீவனாம்சம் கேட்டு அப்பாத்தியம் மறுக்கப்பட்டிருந்தால், அப்படி மறுக்கப்பட்ட தேதியிலிருந்து 12 வருடங்களுக்குள் ஜீவனாம்ச பாத்தியத்தை வற்புறுத்தவேண்டும்.

கேள்வி: (L 2225 சீனுவாசய்யங்கார், தில்லையம்பூர்) ஒரு கோயிலின் டிரஸ்டி தன் சொந்த சொத்துக்களைப்பொறுத்து அக்கோயிலில் சில தர்மங்கள் செய்யும்படி செட்டில்மெண்ட் எழுதி வைத்து, தம்மையே டிரஸ்டியாக நியமித்துக்கொண்டும் அச்சொத்துக்களுக்குக் கோயில் பெயரால் பட்டாவையும் மாற்றிவிட்டால் பிறகு அக்கோயிலுக்கு எண்டௌமெண்ட் போர்டால் வேறு டிரஸ்டி நியமிக்கப்பட்டால் அவரிடம் இந்தச்செட்டில்மெண்டில் கண்ட நிலங்களையும் பழைய டிரஸ்டி ஒப்புவிக்கவேண்டுமா?

பதில்: ஒப்புவிக்கவேண்டும்.

கேள்வி: (L 2259 வள்ளிநாயகம், ஸ்ரீவைகுண்டம்) ஒரு ஹிந்து தகப்பனர் தம்மால் சுயமாகச் சம்பாதிக்கப்பட்ட சொத்தை மேஜரான தம் மகனுக்குத் தெரியாமல், கடன் இல்லாமலிருக்கும்போது, ஈனக்கிரயத்திற்கு விற்கமுடியுமா?

பதில்: விற்கலாம். இனமாகக்கூடக் கொடுக்கலாம்.

கேள்வி: (L 2261 ஷாஹுல் ஹமீது, கந்தர்வக்கோட்டை) ஒரு கேசில் வக்கீலுக்குப் பேசிய பீசு பாதி கொடுக்கப்பட்ட பிறகு அவ்வழக்கு பஞ்சாயத்தார் முன்னிலையில் ராசியாகிவிட்டால் வக்கீலுக்குப் பாக்கிப் பீசு கொடுக்க வேண்டுமா?

பதில்: கொடுக்கவேண்டும்.

கேள்வி: (L 2264 ஹனிபா, ஏனங்குடி) ஒரு மிராசுதாரிடம் சாகுபடிக்கு நிலங்கள் ஒப்புக்கொண்டு ஒரு வருடத்திற்கு எழுதிக் கொடுக்கப்படும் குத்தகைப்பத்திரத்திற்கு ஸ்டாம்பு எவ்வளவு? இப்பத்திரம் ரிஜிஸ்டராகும்போது நிலச்சொந்தக்காரரும் தமக்குச் சம்மதம் என்று பத்திரத்தில் கை எழுத்துப்போடவேண்டியது அவசியமா?

பதில்: ஸ்டாம்பு கிடையாது. நிலச்சொந்தக்காரர் கையெழுத்து விவசாயக் குத்தகைகளுக்கு சட்டப்படி அவசியமில்லை.

கேள்வி: (L 2279 ராமச்சந்திரன், ஸ்ரீரங்கம்) ஷர்பத்துக்கள் உற்பத்தி செய்ய லைசென்சு தேவையா?

பதில்: ஷர்பத்தில் சர்க்கரை சேர்க்காமலிருந்தால் லைசென்சு தேவையில்லை.

கேள்வி: (L 2280 சுலைமான், நாகூர்) முகமதிய சட்டப்படி, ஒரு பெண் விவாகமாகி சில காலம் பிரஞ்சு இந்தியாவிலுள்ள புருஷனுடன் இருந்து பிறகு அவளைப் புருஷன் இம்சை செய்து அனுதரவும் செய்தால் அப்பெண் எப்படி விவாக ரத்துச் செய்வது உசிதம்?

பதில்: 1939-ஆம் வருடத்திய 8-ஆவது மத்திய சட்டப்படி (அதாவது முஸ்லீம் விவாக ரத்து சட்டப்படி) கோர்ட் மூலம் விவாக ரத்துச் செய்து கொள்ளலாம்.

கேள்வி: (L 2290 ராஜகோபால் கரம்பக்குடி) வெற்றிலை பாக்குக் கடையில் புகையிலையும் சேர்த்து விற்ருல் அதற்கும் விற்பனை வரி உண்டா?

பதில்: புகையிலை விற்பனைக்குத்தனிக் கணக்கு வைத்துக் கொண்டிருந்தால் விற்பனை வரிச் சட்டப்படி விற்பனை வரி கிடையாது.

கேள்வி: (L 2303 சின்னையா நாயுடு, திருவானைக்காவல்) கெடுப்படி திருப்பிக் கொள்வதாகவும் தவறினல் மறுதினமே சுத்தக் கிரயம் ஆகுமென்றும் ஷரத்து எழுதியுள்ள சுவாதீன ஒத்திப் பத்திரத்திற்குக் கெடுப்படி பணம் கட்டாவிட்டால் நட

வடிக்கை எடுக்காமலே ஒத்தி வாங்கியவருக்கு நிலம் சொந்தமாகி விடுமா?

**பதில்:** ஆகாது. அவ்வித ஷரத்து செல்லாது. ஒத்தியைச் சட்டப்படி மீட்டுக் கொள்ளலாம்.

**கேள்வி:** (L 2308 செல்லையா, பேட்டை) ஒரு ரிஜிஸ்டரான வியாபாரிக்கு வருஷ விற்பனைத் தொகை ரூ. 9850—0—0. அவர் வரியாக வசூலித்த பணம் ரூ. 153—14—6 இந்த வியாபாரிக்கு விற்பனை வரி செலுத்தக் கடமை உண்டா? அல்லது ரூ. 153—14—6 மட்டில் செலுத்த கடமை உண்டா?

**பதில்:** இவருக்கு விற்பனை வரி உண்டு. விற்பனைத் தொகையும் வரி வசூல் தொகையும் சேர்ந்து ரூ. 10,000-க்கு மேல் இருக்கிறது. இதற்கு "டர்ன் ஓவர்" என்று பெயர். இதற்குத்தான் வரி. "டர்ன் ஓவர்" என்பது மொத்த வசூல் தொகை, இதை கணக்குச் செய்வதில் வரி வசூல் செய்ததைக் கழிக்க முடியாது.

**கேள்வி:** (L 2319 கிருஷ்ணசாமி) ஒரு பெண் விவாகமாகி ஒரு பையனும் இருக்கிறான். கணவன் இறந்துவிட்டான். அப்பெண் விபசாரியாக இருந்தால் புருஷனுடைய சொத்து அவளுக்கும் சேர்ந்ததா? அல்லது பையனுக்கு மட்டும் சேர்ந்ததா?

**பதில்:** இருவருக்கும் வார்சு பாத்தியம் உண்டு! (மகன் இல்லாமல் மனைவி மட்டில் இருந்து அவள் புருஷன் இறக்கும் காலத்தில் விபசாரியாக இருந்தால் அவளுக்கு வார்சு பாத்தியம் ஏற்படாது. இதுதான் ஹிந்து சட்டம். மகன் இருந்தாலும் அவனுடன் கூடவே மனைவிக்கும் வார்சு பாத்தியம் அளித்த 1937-ஆம் வருடத்திய ஹிந்து ஸ்திரீகளின் வார்சு பாத்திய சட்டப்படி, மனைவி விபசாரியாக இருந்தாலும் அவளுக்கும் வார்சு பாத்தியம் இருப்பது போல் அர்த்தமாகின்றது. இதைச் சட்ட சபைதான் திருத்தவேண்டும்.)

**கேள்வி:** (L 2325 சுப்பிரமணியம், பொள்ளாச்சி) கட்டிடம் கட்டி இருபது வருடமான பிறகு முனிசிபாலிடியார் அதை இடிக்கச் சொல்லலாமா?

**பதில்:** சர்க்காருக்கு அல்லது முனிசிபாலிடிக்குச் சொந்தமான ரஸ்தா அல்லது இடத்தில் ஆக்கிரமிப்பாகக் கட்டிடம் இருந்தால் இடிக்கச் சொல்லலாம்.

**கேள்வி:** (L 2328 வெங்கண்ணன், திருவேத்திபுரம்) ஒரு வியாபாரி தன் மொத்தக் கொள்முதலில் 20-ல் ஒரு பாக மதிப்புள்ளவைகளைப் புரோக்கர் மூலம் வாங்கி, அவர்கள் பில் கொடுக்க மறுத்து, ஷை வியாபாரியே ஒரு காகிதத்தில் 'புரோக்கர் மூலம் வாங்கியது' என்று விலாவரி எழுதி, கொள்முதல் எழுதியிருந்தால் ஷை கொள்முதலை நம்புவதற்கு ஆதாரமில்லை என்று வருமான வரி அல்லது விற்பனை வரி அதிகாரிகள் வரியைத் தோராயமாக நிர்ணயித்து (எஸ்டிமேட் செய்து) விதிக்க அதிகாரமுண்டா?

**பதில்:** வருமான வரி அதிகாரிகளுக்கும் விற்பனை வரி அதிகாரிகளுக்கும் ஒருவருடைய கணக்குகளை நம்பவும் நம்பாமலிருக்கவும் சட்டப்படி உரிமை உண்டு. (ஒரு குறிப்பிட்ட கணக்கு நம்பக்கூடியதா அல்லவா என்பது சட்டப் பிரச்னை அல்ல. ஆகையால் இக்கேள்வியில் இருக்கும் சட்ட சம்பந்தமான சந்தேகத்திற்கு மட்டில் மேற்கண்டபடி பதில் அளிக்கப்பட்டிருக்கிறது.)

**கேள்வி:** (L ஷை நாகராஜன், திருவத்திபுரம்) மைனர்களும் மேஜர்களும் உள்ள ஒரு குடும்பச் சொத்தில் ஸ்தாவர சொத்துகளை மட்டும் ரிஜிஸ்டர் பத்திரம் மூலம் பங்கிட்டும், ஜங்கம சொத்துக்களையும் வியாபார ஆஸ்தியையும் குடும்பத்தினர் எல்லோரும் கையெழுத்தும்போட்டு ரிஜிஸ்டர் செய்து கொள்ளாமல் வெற்று காகிதத்தில் பாக ஏற்பாடு செய்து கொண்டால் செல்லுமா?

**பதில்:** செல்லும். ஆனால் இந்த வெற்றுக் காகிதம் கோர்ட்டுகளில் தாக்கலாக வேண்டி இருந்தால் ஸ்டாம்பு அபராதம் கட்ட நேரலாம்.

**கேள்வி:** (L 2329 ஜப்பார், ஈரோடு) ஒரு முஸ்லீம் மேஜராவதற்கு எத்தனை வயது பூர்தியாகவேண்டும்? மேஜரான பின்புதான் கார்டியன் சொத்தை ஒப்புவிக்க

வேண்டுமா? எந்த முறையில் எங்கு கார்டியன் பொறுப்பை நீக்கவேண்டும்? அப்படிப் பொறுப்பை நீக்காது மேஜரானதும் சொத்தை அடமானம் வைத்துக் கடன் வாங்கினால் கார்டியனைப்பாதிக்குமா?

**பதில்:** கோர்ட்டில் கார்டியன் நியமிக்காவிட்டால் 18 வயது பூர்த்தி ஆனதும் மேஜர். கார்டியன் கோர்ட்டால் நியமிக்கப்பட்டிருந்தால் 21 வயது பூர்த்தி ஆகவேண்டும். கோர்ட்டால் நியமிக்கப்பட்ட கார்டியன் கோர்ட்டில் கணக்குகள் ஒப்புவித்து விலகிக் கொள்ளலாம். கோர்ட்டால் நியமிக்கப்படாதவர் மேஜரானவரிடம் கணக்குகளை ஒப்படைத்து விடுதலை பெற்றுக் கொள்ளலாம். மேஜரானதும் சொத்துக்களைப்பராதீனம் செய்யப் பாத்தியம் உண்டு.

**கேள்வி:** (L 2339 கறுப்பையா, புதுக்கோட்டை) பாகமாகாத ஒருபொதுக் குடும்பத்தால் ஒரு கடை நடத்தப்பட்டும், அதே குடும்பத்தில் ஒருவர் மட்டில் தனியாக வேறு ஒரு கடையும் நடத்தினல் விற்பனை வரிக்காக இரண்டு கடைகளுக்கும் சேர்த்து மொத்தத் தொகைக்கு விற்பனை வரியா? அல்லது தனித்தனியாக விற்பனை வரி கொடுக்கவேண்டுமா?

**பதில்:** தனியாக நடத்தப்படும் கடையில் குடும்பத்திற்கும் பாத்தியமிருந்தால் ஒரே கணக்காகப் பாவித்து விற்பனை வரி போடப்படும். அப்படியில்லாவிட்டால் தனித்தனிக்கணக்குக் கொடுக்கலாம்.

**கேள்வி:** (L 2373 பெரியநாயகம் பிள்ளை, திருநெல்வேலி) ஒரு நிலச்சொந்தக்காரர் நிலத்தை ஒத்தி வைத்து, தாமே ரிஜிஸ்டர் தஸ்தவேஜி மூலம் குத்தகைக்கு ஒப்புக்கொண்டு பயிர் செய்த காலத்தில் அவருக்கு ஷை சொத்தைப் பொறுத்து, சர்க்கார் கிணறு வெட்ட மான்யம் கொடுக்கலாமா? கிணறு வெட்டி முடிக்காததால் மான்யத் தொகையை வசூலிக்க ஷை சொத்தை ஒத்திதார் சம்பந்தமில்லாமல் ஏலம் விடச் சர்க்காருக்குப் பாத்தியம் உண்டா? அப்படி, சர்க்காரால் சொத்தை ஏலம் விடப்பட்ட பின் ஒத்தி பெற்றவர் ஒத்தித் தொகையை யாரிடமிருந்து எப்படி வசூலிக்கவேண்டும்?

**பதில்:** கிணறு வெட்டவேண்டி மானியம் கொடுப்பது சர்க்கார் இஷ்டம். கிணறு வெட்டவில்லை என்று மானியம் வாங்கியவருடைய சொத்தை ஏலம் போடுவதால் ஒத்தி பெற்றவருக்கு ஒன்றும் நஷ்டமில்லை. ஏனென்றால் நிலத்தின் சொந்தக்காரருக்கு ஒத்திக்குட்பட்ட சுவான் பாத்தியம்தான் உண்டு. அந்தப் பாத்தியத்தைத்தான் சர்க்கார் ஏலம் போடலாம். ஒத்திப்பாத்தியம் ரத்தாகாது. ஒத்தித் தொகையை (மற்றபடி வசூலிக்கப் பாத்தியம் இருந்தால்) சொத்து ஜவாப்தாரியைக் கொண்டே வசூலிக்கலாம்.

**கேள்வி:** (L 2225 பிச்சமூர்த்தி, குளித்தலை) ஒரு புத்தகம் ஏன், எப்படி, பறிமுதல் செய்யப்படுகிறது? அந்த புத்தகத்தைப்பற்றிச் சர்க்காருக்கு யாராவது அறிவித்துத் தடை செய்யப்படுகிறதா? அல்லது சர்க்காரே நேரடியாக அறிந்து தடை செய்கிறார்களா?

**பதில்:** இந்தியன் பீனல் கோடு என்ற குற்றங்களைக் குறித்த சட்டத்தில் அரசாங்கத்தின் மீது துவேஷத்தை உண்டு பண்ணுவதும் (செக்ஷன் 124 A); வகுப்புத் துவேஷத்தை உண்டுபண்ணுவதும் (செக்ஷன் 153 A); மதத் துவேஷத்தை உண்டு பண்ணுவதும் (செக்ஷன் 295 A) குற்றங்களாகும். தவிர இந்தியன் பிரஸ் ஆக்ட் என்ற அச்சகங்களைக் குறித்த சட்டப்படி கொலை அல்லது குற்றங்களைச் செய்யத்தூண்டும் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் அச்சிடக்கூடாது. அக்குற்றங்களைச் செய்தவர்களைப் பெருமைப்படுத்தியும் பத்திரிகை அல்லது புத்தகங்கள் வெளியிடக்கூடாதென்றும் இருக்கிறது. இவ்விதம் தடுக்கப்பட்ட விஷயங்கள் அடங்கிய பத்திரிகைகளையும் புத்தகங்களையும் சர்க்காருக்குப் பறிமுதல் செய்யும்படி மாகாண சர்க்கார் கெஜட்டில் விளம்பரம் செய்யலாம். அப்படி விளம்பரம் செய்யப்பட்டவுடன் அவ்வித பத்திரிகைகளையும் புத்தகங்களையும் கைப்பற்ற போலீசாருக்கு கிரிமினல் புரொஸீஜர்கோட் 99 A செக்ஷன் படிக்கும் பிரஸ் ஆக்ட் செக்ஷன் 19 படிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

# பத்திரங்கள் - ஸ்டாம்பு, ரிஜிஸ்டர் கட்டணம் உள்பட

["வக்கீல்" 1949 அக்டோபர், நவம்பர், டிசம்பர் இதழ்களில் கிரயம், அடமானம் குத்தகை-வாடகை இவைகளுக்கான பத்திரங்களைப் பற்றியும் அவைகளுக்குரிய ஸ்டாம்பு, ரிஜிஸ்டர் கட்டணங்களையும் விபரமாய் எழுதியுள்ளோம்.]

## "செட்டில் மெண்ட்" பத்திரங்கள்

யாதொரு விலை அல்லது பிரதிப் பிரயோஜனமுமில்லாமல் ஒருவர் தம்முடைய சொத்துக்களை வேறு ஒருவருக்குக் கொடுப்பது பொதுவாக 'இனம்' என்று வழங்கப் படுகின்றது. வெகுமதி, தானம், என்றும் சொல்வதுமுண்டு. 'இனம்' பலவகைப் படும். அவைகளைக் குறித்து, பத்திரங்கள் ஏற்படுத்தும் விஷயமாய் மட்டில் இரண்டு வகுப்பாகப் பிரித்துக் கொள்ளலாம். அதாவது ஆங்கிலத்தில் "செட்டில்மெண்டு பத்திரங்கள்" என்றும் "டிரஸ்டு பத்திரங்கள்" என்றும் வழங்கும் விவஸ்தை அல்லது ஏற்பாட்டுப் பத்திரங்கள் ஒரு வகை. இவைகளுக்கு ஸ்டாம்பு குறைவு. இவைகள் அல்லாத இனம் பத்திரங்களுக்கு ஸ்டாம்பு அதிகம். ஆகையால் இவை ஒவ்வொன்றையும் தனித்தனியாகக் கவனிப்போம்.

'செட்டில்மெண்ட்' பத்திரங்கள்: ஒருவர் தம்முடைய சொத்துக்களை வேறு ஒருவருக்கு, கீழ்க்கண்ட நோக்கத்துடன் (அவர் உயிருடன் இருக்கும்போதே அமுலுக்கு வரும்படி) கொடுத்தால், அது "செட்டில்மெண்ட்" என்று சொல்லப் படும். அதாவது (1) சொத்து யாருக்குக் கொடுக்கப்படுகிறதோ அவரைத்தாம் மணம் செய்து கொள்வதற்காகவோ அல்லது (2) தம்முடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கோ அல்லது தாம் யாரைக் காப்பாற்ற வேண்டுமென்று விரும்புகிறாரோ அவருக்கோ தம்முடைய சொத்துக்களைக் கொடுக்கவோ; அல்லது ஜீவனம் செய்யத் தம்மையே நம்பி இருப்பவர்களுக்கு ஒரு ஏற்பாடு செய்யவோ அல்லது (3) மதம் அல்லது தர்மம் சம்பந்தமான காரியங்களுக்காகவோ—ஒருவர் தம்முடைய சொத்துக்களைக் கொடுப்பதுதான் "செட்டில் மெண்ட்" ஆகும். இந்த நோக்கங்கள் இல்லாமல் சொத்தை மாற்றுவது "செட்டில் மெண்ட்" ஆகாது.

உதாரணம்: ஒருவர் தம் சொத்துக்களில் சிலவற்றைத் தம்முடைய சகோதரிக்கும் அவளுடைய மகனுக்கும் கொடுத்து ஒரு பத்திரம் எழுதுகின்றார். அவர்களுடைய ஜீவனத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற எண்ணமில்லை. அவர்கள் பேரில் தமக்குள்ள பிரியத்தால் இவ்விதம் தம்முடைய சொத்துக்களை 'இனமாக'க் கொடுக்கிறார். இது "செட்டில்மெண்ட்" ஆகாது. இனம் அல்லது தானசாசனமாகும். அதற்குரிய அதிக ஸ்டாம்பு வேண்டும். ஆனால் அவருடைய சகோதரியும் அவளுடைய மகனும் ஜீவனத்திற்கே அவரை நம்பி இருந்து அதற்காக அவர்களுக்கு ஒரு ஏற்பாடு செய்யும் எண்ணத்துடன் அவர்களுக்குத்தம் சொத்தைக் கொடுத்தால், இது 'செட்டில்மெண்ட்' ஆகும். இனம் அல்லது தான சாசனத்திற்கு வேண்டிய ஸ்டாம்பைவிட குறைவான ஸ்டாம்பு போதும்.

"செட்டில்மெண்ட்" பத்திரங்களுக்கு ஸ்டாம்பு: செட்டில்மெண்ட் பத்திரத்தில் விநியோகிக்கப்படும் சொத்தின் உண்மையான மதிப்பை அப்பத்திரத்தில் காண வேண்டும். (ஸ்டாம்பு ஆக்ட் செக்ஷன் 27) அப்படிக் காண்பிக்காமலிருப்பது குற்றமாகும். ரூ. 500 வரை அபராதம் விதிக்

கப்படலாம். சொத்தின் மதிப்பின் பேரில் அடியில் கண்டபடி ஸ்டாம்பு வேண்டும்.

ஸ்டாம்பு விகிதம்.

| "சொத்து மதிப்பு" | | | | | ஸ்டாம்பு ரூ. அ.பை |
|---|---|---|---|---|---|
| ரூ. 10-க்கு மேற்படாமலிருந்தால் | | | | | 0—6—0 |
| ரூ. 10-க்கு மேல் ரூ. 50-க்கு மேற்படாமலிருந்தால் | | | | | 0—12-0 |
| ரூ. 50 | ,, | ரூ. 100 | ,, | | 1—8—0 |
| ரூ. 100 | ,, | ரூ. 200 | ,, | | 3—0—0 |
| ரூ. 200 | ,, | ரூ. 300 | ,, | | 4—8—0 |
| ரூ. 300 | ,, | ரூ. 400 | ,, | | 6—0—0 |
| ரூ. 400 | ,, | ரூ. 500 | ,, | | 7—8—0 |
| ரூ. 500 | ,, | ரூ. 600 | ,, | | 9—0—0 |
| ரூ. 600 | ,, | ரூ. 700 | ,, | | 10—8—0 |
| ரூ. 700 | ,, | ரூ. 800 | ,, | | 12—0—0 |
| ரூ. 800 | ,, | ரூ. 900 | ,, | | 13—8—0 |
| ரூ. 900 | ,, | ரூ. 1000 | ,, | | 15—0—0 |

ரூ. 1000-க்கும் மேற்பட்ட ஒவ்வொரு ரூ. 500-க்கும் அதன் பாகத்திற்கும் அதிகப்படியாக ரூ. 7—8—0

ரிஜிஸ்டர் கட்டணம்: செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட மதிப்புத் தொகைக்கு அடியில்கண்டபடி ரிஜிஸ்டர் கட்டணம் கட்டவேண்டும்:—

| தொகை. | | | | ரிஜிஸ்டர் கட்டணம் ரூ. அ.பை |
|---|---|---|---|---|
| ரூ. 1 முதல் | | ரூ. 10 உள்பட | | 0—6—0 |
| ரூ. 10 க்கு | | மேல் ரூ. 25 | ,, | 0—9—0 |
| ரூ. 25 | ,, | ரூ. 50 | ,, | 0-12—0 |
| ரூ. 50 | ,, | ரூ. 75 | ,, | 1—2—0 |
| ரூ. 75 | ,, | ரூ. 100 | ,, | 1—8—0 |
| ரூ. 100 | ,, | ரூ. 200 | ,, | 2—4—0 |
| ரூ. 200 | ,, | ரூ. 300 | ,, | 3—0—0 |
| ரூ. 300 | ,, | ரூ. 400 | ,, | 3-12—0 |
| ரூ. 400 | ,, | ரூ. 500 | ,, | 4—8—0 |
| ரூ. 500 | ,, | ரூ. 600 | ,, | 5—4—0 |
| ரூ. 600 | ,, | ரூ. 750 | ,, | 6—0—0 |
| ரூ. 750 | ,, | ரூ. 1000 | ,, | 7—8—0 |
| ரூ. 1000 | ,, | ரூ. 1500 | ,, | 9—0—0 |
| ரூ. 1500 | ,, | ரூ. 2000 | ,, | 10—8—0 |
| ரூ. 2000 | ,, | ரூ. 2500 | ,, | 12—0—0 |
| ரூ. 2500 | ,, | ரூ. 3000 | ,, | 14—0—0 |
| ரூ: 3000 | ,, | ரூ. 3500 | ,, | 16—0—0 |
| ரூ. 3500 | ,, | ரூ. 4000 | ,, | 18—0—0 |
| ரூ. 4000 | ,, | ரூ. 5000 | ,, | 20—0—0 |

ரூ. 5000-க்கு மேல் இருந்தால் ரூ. 5000-க்குள்ள ரூ. 20—0—0-ம், மேற்கொண்டிருக்கும் ஒவ்வொரு ரூ. 1000-க்கும் ரூ. 4—0—0 விதமும் ரிஜிஸ்டர் கட்டணம் கட்டவேண்டும்.

இதைத்தவிர ரிஜிஸ்டர் செய்யவேண்டிய எவ்விதப் பத்திரமும் 800 வார்த்தைகளுக்கு மேல் அடங்கியதாக இருந்தால், முதல் 800 வார்த்தைகளுக்கு யாதொரு எழுத்துக் கட்டணமும் இல்லை. அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு 175 வார்த்தைகளுக்கும் அணா 4 வீதம் எழுத்துக் கட்டணம் கொடுக்கவேண்டும். மொத்த எழுத்துக்கள் எவ்வளவு என்று ரிஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் சொல்லும் மதிப்புப் போதுமானது.

# கண்ட்ரோல் - லைசென்ஸ் - ரேஷன் - விலை நிர்ணயம்
# இதர சர்க்கார் அறிக்கைகள்

## விலை நிர்ணயம்

**சென்னை உணவு தானியங்களின் விலைக் கட்டுப்பாடு உத்திரவு (1949):** ஏற்கனவே 24—5—1949 தேதி கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருந்த சென்னை உணவுதானிய விலைக் கட்டுப்பாடு உத்தரவு ரத்து செய்யப்பட்டு, அதற்குப்பதிலாகப் புதிதாய் இந்த உத்தரவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்புது உத்தரவு 4—12—1949 முதல் அமுலுக்கு வந்து விட்டது. அந்தந்த ஜில்லாவில் விளையும் நெல் அரிசி மற்றுமுள்ள உணவு தானியங்களை அதே ஜில்லாவுக்குள் கொள்முதல் செய்வதற்கு மாத்திரமே இந்த உத்தரவில் கண்ட விலை பொருந்தும். இந்த உத்தரவில், விலை நான்கு விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது:

(1) **கிராம விலை:** (சாக்கு இல்லாமல்) கிராமத்தில் போய் நெல் அரிசி, தானியங்களைக் கொள்முதல் செய்வதற்குக் கொடுக்க வேண்டிய விலை.

(2) **மில் விலை:** நெல் அல்லது அரிசியை மில் இருக்கும் இடத்தில் கொண்டுபோய்க் கொடுப்பதற்கான விலை. இதுவும் சாக்கு விலை நீங்கலாக:

(3) ரயில் ஏற்று விலை (F. O. R.) அதாவது நெல் அரிசி மற்றத் தானியங்களை ரயிலில் ஏற்றிய பிறகு கொடுக்கவேண்டிய விலை. இதுவும் சாக்கு விலை நீங்கலாக:

(4) மொத்த விலை-அதாவது லைசென்சு பெற்ற வியாபாரி (மில்காரர் அல்லாதவர்) விற்கவேண்டிய விலை. இவர்கள் விற்பனை செய்வது எவ்வளவு அளவாக இருந்தாலும் இதே விலைதான்.

**கிராம விலை குறையும்:** தஞ்சை ஜில்லாவிலும் சிதம்பரம் தாலூகாவிலும் (இன்னும் சில ஆந்திர ஜில்லாக்களிலும்) மூட்டைகள் அனுப்ப வசதியுள்ள ரயில்வே ஸ்டேஷன்களிலிருந்து ஒரு மைலுக்குள் கிராமம் இருந்தால் இந்த உத்தரவில் கண்டபடி நெல் அல்லது அரிசிக்குக் கிராம விலை கொடுக்கவேண்டும். இதற்குமேல் இருக்கும் இடங்களில் கிராம விலையில் ஒரு மணங்குக்கு ஒரு மைலுக்கு 4½ தம்படி வீதம் வண்டிச் சத்தம் பிடித்துக் கொள்ளலாம். மற்ற ஜில்லாக்களில் ஒரு மில் அல்லது மொத்த வியாபாரியின் கிடங்கிலிருந்து 3 மைலுக்குள் இருந்தால்தான் கிராம விலை கொடுக்கப்படும். அதற்குமேல் உள்ள கிராமங்களில் மைல் 1-க்கு மணங்கு 1-க்கு 4½ தம்படி வீதம் கிராம விலையில் குறைத்துக் கொள்ளலாம். (நெல் அரிசி தவிர மற்றத் தானியங்களுக்கும் எந்த ஜில்லாவாக இருந்தாலும் மேற்கண்டபடியே).

**தாமதமாகக் கொடுப்பதற்கும் விலை குறையும்:** மேலும் ஒவ்வொரு ஜில்லாவிலும் 1948-ஆம் வருடத்திய தீவிரக் கொள்முதல் உத்தரவுப்படி எந்தத் தேதிக்குள் தானியங்களை அளக்கவேண்டுமென்று ஜில்லா கலெக்டர் உத்தரவு செய்கின்றாரோ அத்தேதிக்குள் அளந்தால்தான் மேற்கண்ட கிராம விலை. அத்தேதிக்குப்பிறகு விற்கப்படும் நெல் முதலிய தானியங்களுக்கு மணங்கு 1-க்கு அணா 6 வீதம் பிடித்தம் செய்யப்படும்.

[மில் விலையிலும் மொத்த விலையிலும் நிர்வாகம் முதலியவற்றிற்காக மணங்கு 1-க்கு எவ்வளவு சேர்த்துக் கொள்ளலாம் என்ற விவரங்களும் இந்த உத்தரவில் இருக்கின்றது.]

தமிழ் ஜில்லாக்களுக்கான கிராம விலை மட்டில் கீழே கொடுத்திருக்கிறோம்.

1-வது ஷெடியூல் **கிராம விலை**

**( நெல் 1 மணங்குக்கான விலை )**

| ஜில்லா | முதல் தரம் | இரண்டாவது தரம் | குறுவை |
|---|---|---|---|
| | ரூ.அ.பை. | ரூ.அ.பை. | ரூ.அ.பை. |
| செங்கல்பட்டு | 8—2—9 | 7-11—3 | |
| தென் ஆற்காடு | 8—2—6 | 7-10—6 | 7—6—3 |
| வட ஆற்காடு | 8—5—3 | 7-13—6 | |
| சேலம் | 8-13—0 | 8—5—3 | |
| கோயமுத்தூர் | 8-15—3 | 8—7—9 | |
| திருச்சிராப்பள்ளி | 8—4—9 | 7-12—9 | 7—8—3 |
| தஞ்சாவூர் | 8—2—0 | 7-10—3 | 7—6—0 |
| மதுரை | 8-14—6 | 8—6—9 | |
| ராமநாதபுரம் | 9—3—6 | 8-14—6 | |
| திருநெல்வேலி | 8-11—6 | 8—3—9 | |

மற்ற தானியங்களின் கிராம விலை, எல்லா தானியங்களின் ரயில் ஏற்று விலை, மொத்த வியாபார விலை, தானியங்களின் ரகம் இவை மற்ற ஷெடியூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

*1—12—1949* ( சென்னை சர்க்கார் விசேஷ கெஜட் பாகம் II பக்கம் *1* )

**ஜமீன் இனும் மேல்வாரக் குறைப்புச் சட்டம்**

எஸ்டேட்டுகளில், அதாவது ஜமீன் இனும் கிராமங்களில் ரயத்துக்கள் கொடுக்க வேண்டிய மேல் வாரத்தைக் குறைப்பதற்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் சென்னை 1947ஆம் வருடத்திய 30-வது சட்டத்தை அனுசரித்து, 8—6—1948-ல் சர்க்கார் சில விதிகள் செய்தார்கள். அவைகளுடன் இப்பொழுது புதிதாய் ஒரு விதி ( ரூல் 9 என்று ) சேர்த்திருக்கின்றனர். அதாவது :—

ரூல் 9 : (1) ரயத்துக்கள் கொடுக்க வேண்டிய மேல் வாரம் ரொக்கமாக இல்லாமல் மாசூலின் ஒரு பாகமாக இருந்தால் 1357-ஆம் பசலிக்கும் அதற்குப்பின் உள்ள ஒவ்வொரு பசலிக்கும் எவ்வளவு அளவு நெல் ( அல்லது வேறு தானியம் ) கொடுக்க வேண்டுமென்று ஜில்லா கலெக்டராவது, அவரிடம் அதிகாரம்பெற்ற உத்தியோகஸ்தராவது நிச்சயம் செய்யவேண்டும். கிராமக்கணக்குகளைக் கொண்டும் கிராமத்தில் விசாரித்தும் அந்தந்தப் பசலியின் மேல் வாரத்தைத் தீர்மானம் செய்வார்.

(2) இவ்விதம் ஒரு ரயத்து மேல்வாரமாகக் கொடுக்கவேண்டிய தானியத்திற்கான விலையைக் கொடுத்தால் போதும். விலை எவ்வளவு என்று ஒவ்வொரு பசலியிலும் ரெவன்யூ போர்டார் விளம்பரம் செய்வார்கள்.

( *6—12—1949* சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் *382* )

## லைசென்சு

**சென்னை எரு வியாபாரிகள் லைசென்சு உத்தரவு (1949) :** 1947-ஆம் வருடத்திய எரு வியாபாரிகள் லைசென்சு உத்தரவை ரத்து செய்து, சென்னை சர்க்கார் புதிதாக ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். இது 6—12—1949 முதல் அமுலுக்கு வந்துவிட்டது. இந்த உத்தரவு சென்னை மாகாணம் முழுவதற்கும் உண்டு. ஆனால் செம்படவர்களால் தயாரித்து விற்கப்படும் மீன் எருவுக்கு இந்த உத்தரவு கிடையாது. ஒரு தடவைக்கு ஒரு மணங்குக்குக் குறையாமல் எரு விற்கும் வியாபாரிகளையும் விசையால் ஓடும் செக்கு வைத்திருப்பவர்களையும்தான் இந்த உத்தரவு கட்டுப்படுத்தும். 6—12—1949-க்குப்பிறகு எரு வியாபாரம் செய்ய லைசென்சு வாங்கிக் கொள்ளவேண்டும். லைசென்சுக்கு மனு சென்னை விவசாய டைரெக்டருக்கு அல்லது அவரால் இதற்காக நியமிக்கப்படும் அதிகாரிக்கு நமூனு 1 படி போடவேண்டும். ஒவ்வொரு வருடமும் லைசென்சைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். புதிதாய் லைசென்சு வாங்கவும், புதுப்பித்துக்கொள்ள

வும் கட்டணம் ரூ. 10. இதைக் கஜானுவில் கட்டி ரசீதை மனுவுடன் அனுப்ப வேண்டும். எரு வியாபாரம் நடத்தப் படும் ஒவ்வொரு இடத்திற்கும் தனித்தனி லைசென்சு வாங்கிக் கொள்ளவேண்டும். லைசென்சு எப்பொழுது வாங்கினுலும் மார்ச்சு மாதம் 31-ஆம் தேதியோடு முடிந்துவிடும். 6—12—49-க்கு முன் பழைய உத்தரவுப்படி லைசென்சு பெற்றிருந் தால் அவர்கள் மட்டில் இப்பொழுது மறு படியும் லைசென்சு வாங்கவேண்டியதில்லை. அது 31—3—1950 வரை செல்லும். அதற்குப்பிறகு புதுப்பித்துக் கொண்டால் போதும். லைசென்சில் எரு வியாபாரி நடந்து கொள்ளவேண்டிய முறையும் வைத்துக் கொள்ளவேண்டிய கணக்கு விபரமும் ரிடர்ன் அனுப்பவேண்டிய விபரமும் இருக் கின்றன. லைசென்சில் கண்ட நிபந்தனை களுக்கு மாருக நடப்பது குற்றமாகும். லைசென்சும் ரத்து செய்யப்படலாம். சரக் கும் சர்க்காருக்குப் பறிமுதல் செய்யப் படலாம்.

எரு : என்பது புண்ணுக்கு ( இலுப்பை, எள், தேங்காய்ப் புண்ணுக்கு நீங்கலாக மற் றப் புண்ணுக்கு) எலும்பு, எலும்புத் தூள், போன்மீல், போன்சூபர், மீன் எரு, பிஷ் குவானே, அமோனியம் சல்பேட், அமோ பாஸ், நிசிபாஸ், பேசில் சிலாக், பொடாசி யம் சல்பேட், பொடாசியம் நைட்ரேட், கைநிட் இவைகளையும் பக்குவம் செய்யப் பட்ட (வியாபாரத்திற்காக கலக்கப்பட்ட) எருக்களையும் குறிக்கும்.

( 6—12—1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 204 )

## ஜீனி சம்பந்தப்பட்ட உத்தரவுகள்

ஜீனி என்பது எது: ஜீனி சம்பந்தப் பட்ட எல்லா கண்ட்ரோல் உத்தரவுகளிலும் 'ஜீனி' என்றால் என்ன என்று விளக்கம் சேர்க்கப்பட்டிருக்கிறது. 'ஜீனி' என்பது (1) கரும்புச்சத்து 90 சத விகிதம் உள்ள எவ்வகை ரூபமுள்ள சர்க்கரையும் (2) சர்க் கரையை இறுகச் செய்வதால் செய்யப் படும் (கற்கண்டு முதலிய) வஸ்துக்கள் என்றும் பொருள்.

( 6—12—1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 207 )

சென்னை வெல்ல ( உற்பத்தி ) கட்டுப்பாடு உத்தரவு 1949: சென்னை சர்க்கார் 15—12—1949-ல் மேற்கண்ட உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். குறிப்பிட்ட இடங்களில் இதை மாகாண சர்க்கார் அமு லுக்குக் கொண்டுவரலாம். அதற்காகக் கெஜட் விளம்பரம் செய்யப்படும். எந்த இடங்களில் இவ்வுத்தரவு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அந்த இடங் களில் எவரும் ஜீனி கமிஷனர் அல்லது அவரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட ( ஜில்லா விவசாய ஆபீசர் அந்தஸ்துக்குக் குறையாத ) விவசாய இலாகா உத்தி யோகஸ்தருடைய அனுமதிச் சீட்டு ( பர் மிட் ) இல்லாமல் வெல்லம் செய்வதற்காகக் கரும்புச்சாறு பிழியக்கூடாது. இவ் வுத்தரவு மீறப்பட்டால் வெல்லம் காய்ச்ச உபயோகப்படுத்தப்படும் சாமான்களும், பாத்திரங்களும், வண்டி, மாடு முதலியவை யும் வெல்லச் சரக்கும் சர்க்காருக்குப்பறி முதலாகப்படலாம்.

( 15—12—1949 சென்னை சர்க்கார் விசேஷ கெஜட் பாகம் II பக்கம் 1 )

சென்னை ... 187693

அச்சுப் பிழைத் திருத்தம்: (1) "வக்கீல்" பத்திரிகை 1949 டிசம்பர் இதழ் பக்கம் 23-ல் "மில் ஜவுளி விலை நிர்ணயம்" என்ற தலைப்பில் 31—10—49 வரை மில் ... பேல் ... கட்டப்பட்ட துணிக்கு—பம்பாய் மில் துணி ஆலை விலை மீது வைக்கக் கூடிய ... அளவு 20% என்று திருத்திக் கொள்ளவும்.

(2) இந்த இதழ் பக்கம் 15-ல் 'வழக்கும் தீர்ப்பும்' என்ற தலைப்பில் 'நீதிபதி கோவிந்த மேனன் அவர்கள்' என்று திருத்திக் கொள்ளவும்.

Printed by DR. V. R. MURTY at the Homoeopathy Press, Banadurai, Kumbakonam. Edited and Published by R. NARASIMHAN B. A., B. L., at No. 73, Dabir West Street, Kumbakonam .for Southern Book House Ltd.

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்.




(பிராஞ்சுகள்: மதராஸ் & மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

**சந்தனாதித்தைலம். அரைக்கீரைவிதைத்தைலம்,**
**கோகுல் கூந்தல் தைலம்**

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

Regd. No. M. 5399

# V. S. & Sons

# SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

## வி. எஸ். & ஸன்ஸ்

## பெப்பர்மெண்டுகள்

தயாரிப்பவர்கள்:

**தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை**

குழம்பகோணம்

( Estd. 1925 )

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.